Ours bank with
Bank of Baroda


# மதுரை மணி

தினசரி தமிழ் நாளிதழ்

Madurai Mani Tamil Evening Daily ®

ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்


New College House
(A Heritage Hotel)
2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
2, Town Hall Road,
Madurai-625 001.


| மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 245 | உள்ளூர் - 02.09.2026 | புதன்கிழமை | விலை ரூ.4/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com |
|---|---|---|---|---|---|---|---|
| Madurai Edition | *Vol 55 | * Issue 245 | வெளியூர் - 03.09.2026 | வியாழக்கிழமை | Price Rs. 4/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com |


12 பாவக்காரகங்கள் 6 ஆம் பாவத் தொடர்புகள் விளக்கம்: சாதகமான பாவங்கள் தீமையான பாவங்கள் தெரிந்து கொள்வோம்!

மத்திய அரசு ஊழியர்களுக்கு தீபாவளிக்கு முன் "மெகா குட் நியூஸ்!

தோண்டத் தோண்ட கிடைக்கும் சடலங்கள்?

புதன்தோறும் கொட்டிக்கிடக்கும் வேலைவாய்ப்புகள்!

## ஷாங்காய் உச்சி மாநாட்டில் பாதுகாப்பு அச்சுறுத்தல் மையம் அமைப்பது உள்ளிட்ட 13 கோரிக்கைகளை முன்வைத்த இந்தியா!

புதுடெல்லி, செப். 02–

கிர்கிஸ்தான் நாட்டின் பிஷ்கெக் நகரில் ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் உச்சி மாநாடு நடைபெற்றது. இதில் இந்திய பிரதமர் மோடி, சீன அதிபர் ஜி ஜின்பிங், பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப் உள்ளிட்ட தலைவர்கள் பங்கேற்றனர்.



இந்த மாநாடு முடிவடைந்த நிலையில், SCO உறுப்பு நாடுகளின் பாதுகாப்பிற்கு எதிரான சவால்கள் மற்றும் அச்சுறுத்தல்களை எதிர்கொள்வதற்கான உலகளாவிய மையம் உள்ளிட்ட 13 முக்கிய கோரிக்கைகளை இந்தியா முன்வைத்ததாக வெளியுறவுத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இந்த மையத்தின் முக்கிய நோக்கம் பயங்கரவாதம், தீவிரவாதம், ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்கள் மற்றும் பிற நாடு கடந்த அச்சுறுத்தல்களை கையாள்வதில் ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் (SCO) உறுப்பு நாடுகளிடையே ஒத்துழைப்பை வலுப்படுத்தவும், சிறந்த ஒருங்கிணைப்பு மற்றும் தகவல் பகிர்வைச் சாத்தியமாக்குவதாகும் என்று இந்திய வெளியுறவுத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

SCO சாசனத்தில் திருத்தங்கள் மற்றும் சேர்த்தல்கள் தொடர்பான ஒரு நெறிமுறை உருவாக்கப்பட்டுள்ளது. இது, அந்த அமைப்பின் வளர்ந்து வரும் நிறுவனக் கட்டமைப்பை வடிவமைப்பதில் இந்தியா பங்கேற்க வழிவகை செய்வதோடு, SCO கட்டமைப்பிற்குள் ஆங்கிலத்தைச் சேர்க்கும் முடிவும் ஒன்றாகும். SCO என்பது 2001–ல் சீனா, கஜகஸ்தான், கிர்கிஸ்தான், ரஷ்யா, தஜிகிஸ்தான் மற்றும் உஸ்பெகிஸ்தான் ஆகிய நாடுகளால் நிறுவப்பட்ட ஒரு அரசியல், பொருளாதார மற்றும் பாதுகாப்பு அமைப்பாகும். அதன் பின்னர், இந்தியா, பாகிஸ்தான், ஈரான் மற்றும் பெலாரஸ் ஆகிய நாடுகளை முழு உறுப்பினர்களாகச் சேர்த்து இது விரிவடைந்துள்ளது. மேலும் பல நாடுகள் பார்வையாளர் அல்லது உரையாடல்– பங்குதாரர் அந்தஸ்தைப் பெற்றுள்ளன.

SCO கட்டமைப்பு என்பது அடிப்படையில் பாதுகாப்பு, பயங்கரவாத எதிர்ப்பு, மற்றும் பொருளாதார, அரசியல் ஒத்துழைப்புகளில் கவனம் செலுத்தும் ஒரு நிரந்தரமான யூரேசிய அரசுகளுக்கிடையேயான மற்றும் பிராந்திய ஒத்துழைப்பு அமைப்பாகும்.

எல்லை தாண்டிய போதைப்பொருள் கடத்தல் மற்றும் போதைப்பொருள் தொடர்பான பயங்கரவாதத்திற்கு எதிராக உறுப்பு நாடுகளிடையே நெருக்கமான ஒருங்கிணைப்பைச் சாத்தியமாக்கும் வகையில், SCO–வின் போதைப்பொருள் தடுப்பு மையத்தின் நிர்வாகக் குழுவிற்கான விதிமுறைகளுக்கு ஒப்புதல் அளிக்கும் முடிவும் ஒன்றாகும்.

இந்த கூட்டத்தில் இந்திய பிரதமர் மோடி பேசியதாவது:–

பயங்கரவாதம், மனித குலம் முழுவதற்கும் பலத்த சவாலாக உள்ளது. பயங்கரவாதத்துக்கு எதிரான போரில், நாம் செயல்– பதிலடி என்ற அணுகுமுறையிலேயே தொடர்ந்து மூழ்கி இருக்க முடியாது.

பயங்கரவாதத்துக்கு நிதியுதவி செய்தல், ஆள்தேர்வு செய்தல், பயங்கரவாதிகளுக்கு பாதுகாப்பான புகலிடம் அளித்தல், மூளைச்சலவை செய்தல் போன்ற பயங்கரவாத கட்டமைப்பை முழுமையாக தகர்தெறிய நாம் ஒன்றுபட்டு பணியாற்ற வேண்டும்.

பயங்கரவாதம் என்ற தீவிர பிரச்சினையில் இரட்டை நிலைப்பாட்டுக்கு இடமில்லை என்று ஒரே குரலில் பேசி, நாம் தெளிவுபடுத்த வேண்டும்.

பயங்கரவாதத்தை கொள்கை ஆயுதமாக பயன்படுத்தி, பயங்கரவாதிகளுக்கு ஆதரவு அளிக்கும் நாடுகளுக்கு நாம் வலிமையான செய்தி விடுக்க வேண்டும். பயங்கரவாதம் யாருடைய வியூக சொத்தாகவும் இருக்க முடியாது என்று கூற வேண்டும்.

இன்றைய உலகம் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்துள்ளது. ஒரு பிராந்தியத்தில் நடக்கும் மோதல், அந்த பிராந்தியத்து டன் அடங்கி விடாது, உலகம் முழுவதும் அதன் தாக்கம் உணரப்படும் என்பதை மேற்கு ஆசிய பிரச்சினையில் பார்த்தோம். எரிசக்தி பாதுகாப்பு, கடல்சார் வர்த்தகம், வினியோக சங்கிலித்தொடர் ஆகியவற்றை பாதித்ததை கவனி த்தோம். தெற்குலக நாடுகள்தான் பெரிய அளவில் பாதிப்பை எதிர்கொண்டன. எனவேதான், அனைத்து பதற்றங்களும், மோதல்களும் போர்க்களத்தில் அல்லாமல், பேச்சுவார்த்தை மற்றும் தூதரக முயற்சிகள் மூலம் தீர்வு காணப்பட வேண்டும் என்று இந்தியா வலியுறுத்தி வருகிறது.

இணைப்பு வசதிகளை அதிகரிப்பதன் முக்கியத்துவத்தை இந்தியா உணர்ந்துள்ளது. சந்தைகள் இணைப்பு, வர்த்தகம், வளர்ச்சிக்கான புதிய வாய்ப்புகள் ஆகியவற்றை இந்தியா ஆதரிக்கிறது. அதே சமயத்தில், அத்தகைய முயற்சிகள் அனைத்து நாடுகளின் இறையாண்மை மற்றும் பிராந்திய ஒருமைப்பாட்டை மதிப்பது அவசியம். ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் ஒத்துழைப்பு, மக்களை நேரடியாக சென்றடைய வேண்டும். மக்களிடை யிலான பிணைப்புதான் நமது மாபெரும் பலம். இந்தியாவைப் பொறுத்தவரை மாபெரும் நாகரிகங்கள், கலாசாரங்கள், சிந்தனைகள் ஆகியவற்றின் கலவைதான் ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு. அடுத்த 25 ஆண்டுகள், மக்களுக்கும், மக்களுக்கும் இடையிலான தொடர்பு, நமது ஒத்துழைப்பின் இதயமாக இருக்க வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

## அரசு மருத்துவமனையில் குழந்தை பிறந்தால் தங்க மோதிரம்! செப்.15 முதல் திட்டம்!

கோவை, செப். 02–

தமிழக அரசு மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் பிறக்கும் குழந்தைகளுக்கு, தாய்மாமன் சீராக தங்க மோதிரம் வழங்கும் திட்டம் செப்.15 முதல் தொடங்குகிறது.




**பயனாளிகள் விண்ணப்பிக்க தேவையில்லை**

ஆதார், ஸ்மார்ட் கார்டு, பிக்மி எண், தாயின் வங்கி கணக்கு விவரங்கள் பெறப்பட்டு வருகின்றன. மருத்துவமனை டிஸ்சார்ஜ் விவரங்களும் தயாராக வைக்கப்படுகின்றன. அரசு மருத்துவமனைகளில் மட்டும் மாதம் 500550 பிரசவங்கள் நடைபெறுகின்றன.

ஆரம்ப சுகாதார நிலையங்களையும் சேர்த்து, இதுவரை 11,500–க்கும் மேற்பட்ட பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

திட்டம் தொடங்கும் நாளில் தகுதியானவர்களுக்கு அழைப்பு விடுக்கப்படும்.

தினமும் குழந்தைகள் பிறப்பதால் பயனாளிகள் எண்ணிக்கையும் தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

## தோண்டத் தோண்ட கிடைக்கும் சடலங்கள்?

காத்மாண்டு, செப். 02–

திபெத்தின் இமயமலை பகுதியில் கடந்த 26–ந்தேதி பனிச்சரிவு காரணமாக போடே கோஷி ஆற்றில் வெள்ளப்பெருக்கு உண்டானது. இந்த வெள்ளம், நேபாளத்தின் வடக்கு மற்றும் மத்திய மாவட்டங்களை தாக்கியது. பாறைகள் மண், சேறு–சகதிகளுடன் சீறிப்பாய்ந்து வந்த வெள்ளம் பெரும் பேரழிவை ஏற்படுத்தியது. சுற்றுலா பயணிகள் உள்பட ஆயிரக்கணக்கானோர் வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்டனர். நேபாளத்தில் 2–வது வாரமாக மீட்புப்பணிகள் தொடர்ந்து நடந்து வருகிறது. அதேபோல் ஆற்றில் அடித்து செல்லப்பட்ட உடல்களை நேபாள ராணுவத்தினர் படகுகளில் சென்று மீட்டு வருகிறார்கள். நேற்று காலை நுவாகோட்டின் பெத்ராபதி பகுதியில் சேற்றில் புதையுண்ட ஒரு வீட்டில் இருந்து 23 பேரின் உடல்களை மீட்புக்குழுவினர் மீட்டனர். அதே போல் பல வீடுகளில் இருந்து உடல்கள் மீட்கப்பட்டு வருகி ன்றன. இதன்மூலம் இந்த பேரிடருக்கு 903 பேர் பலியாகி இருந்தநிலையில் நேற்று மட்டும் 100 பேர் உடல்கள் மீட்கப்பட்டன. இந்நிலையில் மேலும் சில உடல்கள் மீட்கப்பட்டுள்ளநிலையில், நேபாள பேரிடர் பலி எண்ணிக்கை 1,127 ஆக அதிகரித்துள்ளது.



போடே கோஷி மற்றும் திரிசூலி நதிப்படுகைகளில் உள்ள 11 நீர்மின் திட்டப் பகுதிகளில் பணியாற்றிய 894 பேரின் கதி என்ன என்பது இன்னும் தெரியவில்லை. இவர்களில் சுமார் 500 பேர் சுரங்கங்களில் சிக்கி இருப்பதாக தெரிவிக்கப்பட்டு உள்ளது. அவர்களை மீட்கும் பணிகளில் பேரிடர் மீட்புத்துறையினர் சுரங்கங்களுள் களம் இறங்கி உள்ளனர். தோண்டத் தோண்ட கிடைக்கும் சடலங்களால் அதிர்ச்சி நிலவும் நிலையில், பலி எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் என அஞ்சப்படுகிறது.

## முதல்வர் விஜய்யின் அதிரடி ஆட்டம் ஆரம்பம்!

# தேர்வு முடிந்த அன்றே டிஜிட்டல் லைசென்ஸ்! விவசாயிகள், ஆசிரியர்கள் வழக்குகள் அதிரடி வாபஸ்!

## ரூ.பல ஆயிரம் கோடி வளர்ச்சித் திட்டங்கள் அறிவிப்பு!!

சென்னை, செப். 02–

ஓட்டுநர் தேர்வில் தேர்ச்சி பெற்ற விண்ணப்பதாரர்களுக்கு அன்றைய தினமே டிஜிட்டல் ஓட்டுநர் உரிமம் வழங்கப்படும்; விவசாயிகள், ஆசிரியர்கள் மீது திமுக ஆட்சியில் பதியப்பட்ட வழக்குகள் ரத்து செய்யப்படும் என முதல்வர் விஜய் அறிவித்தார்.



நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் குறித்து சட்டசபையில் விதி 110ன் கீழ் முதல்வர் விஜய் அறிவிப்புகள் வெளியிட்டு பேசியதாவது:

* திருநெல்வேலி மாநகராட்சியில் ரூ. 256 கோடி மதிப்பீட்டில் 9 மெகாவாட் திறன் உற்பத்தி செய்யும் வகையிலும், சேலம் மாநகராட்சியில் ரூ. 291 கோடி மதிப்பீட்டில் 10 மெகாவாட் திறன் உற்பத்தி செய்யும் வகையிலும், திடக்கழிவிலிருந்து எரிசக்தி உற்பத்தி செய்யும் திட்டங்கள் செயல்படுத்தப்படும். இத்திட்டங்கள் மொத்தம் ரூ. 547 கோடியில் செயல்படுத்தப்படும்.

* சாலைகளைச் சீரமைக்க, புதிய சாலைகள் அமைக்க, சென்னை உட்பட அனைத்து நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளிலும் ரூ. 1,850 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்படும்.

* பள்ளிகளைச் சுற்றி, குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்யும் சாலை வசதிகள் மற்றும் 105 சாலை சந்திப்புகளை மேம்படுத்தும் பணிகள் ரூ. 110 கோடியில் மேற்கொள்ளப்படும்.

* பிற மாநகராட்சிகளிலும் இதே போன்ற மேம்பாட்டுப் பணிகள் ரூ. 165 கோடியில் மேற்கொள்ளப்படும். இப்பணிகள் அனைத்தும் ரூ. 275 கோடியில் ஒருங்கிணைந்த நகர்ப்புர மேம்பாட்டுத்திட்டமாக செயல்படுத்தப்படும்.

* மதுரை மாநகராட்சியில் 40 ஆண்டுகள் பழமையான பாதாள சாக்கடை அமைப்பை சீரமைக்க முதற்கட்டமாக ரூ.2,400 கோடியில் நடப்பாண்டில் பணிகள் மேற்கொள்ளப்படும்.

* நாகர்கோவில் மாநகராட்சியில் விடுபட்ட மற்றும் புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளிலும், குன்றத்தூர் மற்றும் நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சிகளிலும் ரூ. 960 கோடியில் புதிய பாதாள சாக்கடைத் திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

* சென்னை பெரம்பூர், கொளத்தூர், வில்லிவாக்கம், எழும்பூர் உள்ளிட்ட பகுதிகளில் குடிநீர் மற்றும் கழிவுநீர் அமைப்புகளை மேம்படுத்த ரூ. 236 கோடி செலவிடப்படும்.

* ரூ.4,800 கோடியில் வடசென்னை, ஆவடி, பொன்னேரி மற்றும் மீஞ்சூர் பகுதிகளின் குடிநீர் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில், மீஞ்சூரில் நாளொன்றுக்கு 400 மில்லியன் லிட்டர் கடல்நீரைக் குடிநீராக் கும் திட்டம் அமைக்கப்படும்.

* ஆவடி மாநகராட்சியில் அனைத்து வீடுகளுக்கும் 24 மணி நேரமும் குடிநீர் வழங்க ரூ.500 கோடி மதிப்பீட்டில் புதிய திட்டம் செயல்படுத்தப்படும்.

* மதுரை, கடலூர் மாநகராட்சிகள், 9 நகராட்சிகள் மற்றும் 20 பேரூராட்சிகளில் குடிநீர் வசதிகளை மேம்படுத்த 1,000 கோடி ரூபாயும், பழமையான 33 கூட்டுக்குடிநீர் திட்டங்களைச் சீரமைக்க முதற்கட்டமாக 300 கோடி ரூபாயும் ஒதுக்கப்படும்.

* சென்னை கீழ்ப்பாக்கம் குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தின் திறனை அதிகரிக்க ரூ. 410 கோடியில் திட்டம் செயல்படுத்தப்படும்.

* பொதுமக்களுக்கான பொழுதுபோக்கு வசதிகளை மேம்படுத்தவும் பல்வேறு பசுமைத் திட்டங்கள் செயல்படுத்தப்படும் மக்கள் இயக்கமாக ஒரு கோடி மரக்கன்றுகள் நடப்பட்டு பராமரிக்கப்படும்.

* திருச்சி, திருப்பூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் பெரிய பூங்காக்கள் ரூ. 130 கோடி செலவிலும், மாநிலம் முழுவதும் 250 புதிய பூங்காக்கள் ரூ. 175 கோடி செலவிலும், மொத்தம் ரூ. 305 கோடி செலவில் அமைக்கப்படும்.

* புதிய வகுப்பறைகள் கட்டுதல் மற்றும் நவீன வசதிகளை ஏற்படுத்துதல் உள்ளிட்ட பல்வேறு உள்கட்டமைப்புப் பணிகள் மொத்தம் ரூ. 335 கோடி செலவில் மேற்கொள்ளப்படும்.

* சிதம்பரம் நகராட்சியில் நடைபெறும் உலகப் புகழ்பெற்ற தில்லை நடராஜர் திருத்தேர் விழாவை சிறப்பாக நடத்த கோயிலைச் சுற்றியுள்ள நான்கு ரத வீதிகளில் குடிநீர், பாதாள சாக்கடை, மின்சாரம் மற்றும் தொலைத்தொடர்பு கம்பிகளைத் தரைக்கு அடியில் கொண்டு சென்று, வீதிகளை நவீன முறையில் சீரமைக்க ரூ. 36 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்படும்.

* கடலூரில் புனித டேவிட் கோட்டை முதல் வெள்ளி கடற்கரை வரை ரூ. 8 கோடி மதிப்பீட்டில் பாரம்பரிய நடைபாதை அமைக்கப்படும்

* கன்னியாகுமரி கடற்கரைப் பகுதியை அழகுபடுத்தி, சுற்றுலாப்பயணிகளுக்கான வசதிகளை மேம்படுத்த ரூ. 50 கோடி செலவிடப்படும்.

* சென்னை மாநகராட்சியின் உட்கட்டமைப்பு வசதி குறைவாக உள்ள பகுதிகளில் சாலைகள், மழைநீர் வடிகால்கள், தெருவிளக்குகள், நடைபாதைகள், திடக்கழிவு மேலாண்மை வசதிகள், விளையாட்டு மைதானங்கள் மற்றும் சமுதாய நலக்கூடங்கள் உள்ளிட்ட அடிப்படை வசதிகளை மேம்படுத்த ரூ.100 கோடி செலவிடப்படும்.

* ஓட்டுநர் தேர்வில் தேர்ச்சி பெற்ற விண்ணப்பதாரர்களுக்கு அன்றைய தினமே டிஜிட்டல் ஓட்டுநர் உரிமம் வழங்கப்படும். மாநிலம் முழுவதும் வரும் செப்டம்பர் 15ம் தேதி முதல் வழங்க வசதி ஏற்படுத்தப்படும்.

* போக்குவரத்து தொடர்பான அனைத்து அலுவலக சேவைகளுக்கும், எந்த இடத்திலும் பதிவு, லைசென்ஸ் என்ற முறையில் வசதிகள் ஏற்படுத்தப்படும்.

* புதிய வாகனம் வாங்குவோர் Dig–ital RC– இணையம் வழியாகப் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்; மாநிலம் முழுவதும் வரும் செப்டம்பர் 15ம் தேதி முதல் வழங்க வசதி ஏற்படுத்தப்படும்.

* கடந்த 2021ம் ஆண்டு மே முதல் 2026ம் ஆண்டு ஏப்ரல் வரை, தங்களது வாழ்வாதாரம், உரிமைகள் மற்றும் நியாயமான கோரிக்கைகளுக்காக அமைதியான முறையில் போராடிய விவசாயிகள் மற்றும் ஆசிரியர்கள் மீது பதிவு செய்யப்பட்ட அனைத்து வழக்குகளும் திரும்பப் பெறப்படும்.

* ஜனநாயக உரிமைகளை மதிக்கும் நமது அரசு, கடந்த ஆட்சியாளர்களால் விவசாயிகள் மற்றும் ஆசிரியர்கள் தங்களது கோரிக்கைகளுக்காக அமைதியான முறையில் போராடிய போது அவர்கள் மீது பதிவு செய்யப்பட்ட வழக்குகளை மனிதநேய அடிப்படையிலும், ஜனநாயகக் கொள்கைகளின் அடிப்படையிலும் அனைத்து வழக்குகளையும் திரும்பப் பெற அரசு முடிவு செய்துள்ளது.

* விவசாயிகள் மற்றும் ஆசிரியர்களுக்கும், அவர்களது நியாயமான கோரிக்கைக்களுக்கும் இவ்வரசு உறுதுணையாக நிற்கும்.

* திருவண்ணாமலை மாவட்டம், சிப்காட் தொழிற்பேட்டை எதிர்ப்புப் போராட்டங்களில் ஈடுபட்ட விவசாயிகள் மீது வழக்குகள் பதிவு செய்யப்பட்டதுடன், சில விவசாயிகள் மீது குண்டர் தடுப்புச் சட்டமும் போடப்பட்டது.

* பரந்தூரில் புதிய விமான நிலையம் அமைக்கும் திட்டத்திற்கு எதிராக, விவசாயிகள் தொடர் போராட்டங்களில் ஈடுபட்டனர். விவசாய நிலங்கள், நீர்நிலைகள் மற்றும் வாழ்வாதாரம் பாதிக்கப்படும் என்ற நோக்கத்தோடு, விமான நிலையத் திட்டத்தை கைவிட வேண்டும் என்று போராடிய விவசாயிகள் மீதும் முந்தைய அரசால் மனித நேயமற்ற வகையில் பதிவு செய்யப்பட்ட வழக்குகள் நிலுவையில் உள்ளன.

* மனிதநேய அடிப்படையிலும், ஜனநாயகக் கொள்கைகளின் அடிப்படை யிலும் அனைத்து வழக்குகளையும் திரும்பப்பெற அரசு முடிவு செய்துள்ளது இந்த நடவடிக்கை ஜனநாயக உரிமை களை மேலும் வலுப்படுத்துவதோடு, சாமானிய மக்களுக்கும் அரசுக்கும் இடையிலான நம்பிக்கையை உறுதிப்படுத்தும். இவ்வாறு முதல்வர் விஜய் பேசினார்.

## தலையங்கம்

மதுரை மணி

புதன்கிழமை 02.09.2026

விசுவாவசு தமிழ் வருடம்

ஆவணி மாதம் 16-ம் தேதி

# பிரதமரின் வேண்டுகோள்... அலறும் நகைக்கடைகள்!



இந்தியர்கள் தங்கத்தை வெறும் ஆபரணமாகப் பார்ப்பதில்லை. அது சேமிப்பு. பாதுகாப்பு. குடும்பத்தின் அவசரகால நிதி. பல தலைமுறைகளாக உருவான ஒரு பொருளாதாரப் பழக்கம். அப்படிப்பட்ட தங்கத்தை, "தேவையில்லாமல் அதிகமாக வாங்காதீர்கள்" என்று பிரதமர் நரேந்திர மோடி நேரடியாக மக்களிடம் கேட்பது சாதாரண அறிவுரை அல்ல. நாட்டின் பொருளாதார நிலைமையைப் பற்றி அரசாங்கம் மக்களுக்கு அனுப்பும் ஒரு முக்கியமான எச்சரிக்கை.

அன்னியச் செலாவணி வெளியேற்றத்தைக் குறைக்க வேண்டும். ரூபாயின் மீது இருக்கும் அழுத்தத்தைக் குறைக்க வேண்டும். நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்த வேண்டும். இதற்காக வெளிநாட்டுப் பயணங்களையும், வெளிநாடுகளில் திருமணங்களையும், தேவையற்ற தங்கக் கொள்முதலையும் குறைக்க வேண்டும் என்கிறார் பிரதமர்.

ஆனால் கேள்வி இங்கேதான் தொடங்குகிறது.

**நாட்டின் பொருளாதாரத்தை நிர்வகிக்கும் பொறுப்பு அரசிடமா? மக்களிடமா?**

மக்கள் தங்கம் வாங்குவதைக் குறைத்தால் அன்னியச் செலாவணி சேமிக்கப்படும் என்பது உண்மை. ஆனால், தங்கத்தின் மீது இந்தியர்களுக்கு இருக்கும் ஈர்ப்பை மட்டும் குறை சொல்வது போதுமா? தங்கம் ஏன் இந்தியர்களின் மிகப்பெரிய சேமிப்பு கருவிகளில் ஒன்றாக இருக்கிறது என்பதையும் அரசு சிந்திக்க வேண்டாமா?

பிரதமரின் வீடியோ வெளியானவுடன் பங்குச்சந்தையில் நகை நிறுவனங்களின் பங்குகள் சரிந்திருப்பது இந்த விவாதத்தின் இன்னொரு முகத்தை வெளிப்படுத்துகிறது.

கல்யாண் ஜூவல்லரி 6.63% சரிவு. டைட்டன் 1.58% சரிவு. தங்கமயில் ஜூவல்லரி 1.47% சரிவு.

ஒரு பிரதமரின் சில நிமிட வீடியோ, பங்குச்சந்தையில் ஒரு துறையின் பங்குகளை அசைக்கும் அளவுக்கு தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்றால், அந்த வார்த்தைகளின் பொருளாதார எடை எவ்வளவு என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

இதில் அரசாங்கத்தின் நோக்கத்தை தவறாகப் புரிந்து கொள்ள வேண்டியதில்லை. தங்க இறக்குமதிக்காக பெருமளவு அன்னியச் செலாவணி வெளியேறுவது இந்தியாவுக்கு நீண்டகால சவால்தான்.

ஆனால், தங்கம் வாங்காதீர்கள் என்று மக்களிடம் சொல்லும் அரசாங்கம், மக்கள் ஏன் தங்கத்தை வாங்குகிறார்கள் என்ற கேள்விக்கும் பதில் சொல்ல வேண்டும்.

**வங்கிகளில் கிடைக்கும் வட்டி போதுமானதா?**

மாற்று முதலீடுகள் மீது மக்களுக்கு முழுமையான நம்பிக்கை இருக்கிறதா?

பணவீக்கத்திலிருந்து தங்கள் சேமிப்பைப் பாதுகாக்க மக்கள் எந்த வழியைத் தேர்வு செய்ய வேண்டும்?

இந்தக் கேள்விகளுக்கெல்லாம் தெளிவான பதில் இல்லாமல், "தங்கம் வாங்காதீர்கள்" என்ற அறிவுரை மட்டும் எவ்வளவு தூரம் பயன் தரும்?

மேலும், இது மோடியின் முதல் வேண்டுகோளும் அல்ல. சில மாதங்களுக்கு முன்பும் இதேபோன்ற கருத்து முன்வைக்கப்பட்டது. ஆனால் அதன் பின்னரும் இந்தியாவின் தங்க இறக்குமதி குறிப்பிடத்தக்க அளவில் தொடர்ந்துள்ளது.

இதன் அர்த்தம் ஒன்றுதான்:

மக்களின் தங்க ஆசையை ஒரு வீடியோவால் மாற்ற முடியாது.

அதற்குக் காரணம் பொருளாதாரத்தின் ஆழத்தில் இருக்கிறது.

தங்கம் மீதான நம்பிக்கையை குறைக்க வேண்டுமென்றால், அதற்கு மாற்றாக மக்கள் நம்பக்கூடிய சேமிப்பு மற்றும் முதலீட்டு சூழலை உருவாக்க வேண்டும். நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் சாதாரண மக்களும் பயன் பெறுகிறார்கள் என்ற நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும்.

இல்லையெனில், தங்கம் வாங்க வேண்டாம் என்ற வேண்டுகோள் ஒவ்வொரு முறையும் ஒரு புதிய கேள்வியை எழுப்பும்:

"நாட்டின் பொருளாதார நிலைமை உண்மையில் எவ்வளவு அழுத்தத்தில் இருக்கிறது?"

இதற்கிடையில் நகைக்கடை பங்குகள் சரிவது வெறும் பங்குச்சந்தை எதிர்வினை அல்ல. அரசின் பொருளாதாரச் செய்தி, மக்கள் நுகர்வு மற்றும் தொழில்துறையின் எதிர்காலம் ஆகியவை ஒன்றோடொன்று எவ்வளவு நெருக்கமாக இணைந்துள்ளன என்பதற்கான வெளிப்பாடு.

தங்கத்தை வாங்காதீர்கள் என்று சொல்வது அரசுக்கு எளிதாக இருக்கலாம்.

ஆனால் தங்கத்தைவிட சிறந்த சேமிப்பை நம்பும் அளவுக்கு மக்களின் பொருளாதார நம்பிக்கையை உருவாக்குவதுதான் உண்மையான சவால்.

அந்த சவாலுக்கு அரசு என்ன பதில் சொல்கிறது என்பதே அடுத்த கேள்வி.

# "சண்டை போடலாம்... கூட்டணியை மட்டும் விட்டுடாதீங்க!"




சென்னை, செப். 02–

தவெக காங்கிரஸ் கூட்டணியில், 2029 நாடாளுமன்றத் தேர்தல் பிரதமர் வேட்பாளர் விவகாரத்தில் ஏற்பட்ட கருத்து மோதலுக்கு தற்போது முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் ராஜேஷ்குமாரின் சர்ச்சைக்குரிய கருத்தால் சலசலப்பு ஏற்பட்ட நிலையில், காங்கிரஸ் எம்.பி.க்கள் மாணிக்கம் தாகூர், பிரவீன் சக்கரவர்த்தி ஆகியோர் முதல்–அமைச்சர் விஜய்யை தனியாக சந்தித்து பேசியுள்ளனர். கூட்டணி ஒற்றுமைக்கு பாதிப்பு ஏற்படுத்தும் வகையில் யாரும் பேசக்கூடாது என டெல்லி மேலிடம் கூறிய தகவலும் தெரிவிக்கப்பட்டது.

இதனை ஏற்றுக்கொண்ட விஜய், "கூட்டணி தொடர்பான வதந்திகளை நம்ப வேண்டாம்; அனைவரும் ஒருங்கிணைந்து செயல்படுவோம்" என கூறியதாக காங்கிரஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# திருப்பூர் மாநகர் மாவட்ட காங்கிரஸ் கமிட்டி சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம்!




திருப்பூர், செப். 02–

இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் தேசியத் தலைவர். மல்லிகார்ஜுன கார்கே காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர். ராகுல் காந்தி மீது உத்தரகாண்ட் மாநில காவல்துறையினர் வழக்கு பதிவு செய்ததை கண்டித்து திருப்பூரில் மாநகர் மாவட்ட காங்கிரஸ் கட்சியின் சார்பில் குமரன் சிலை முன்பு கண்டன ஆர்ப்பாட்டம் மாநகர் மாவட்ட தலைவர். கோபால்சாமி EX–.M.C தலைமையில் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் தேசிய தலைவர் மல்லிகார்ஜுன கார்கே அவர்களை சாதிய ரீதியாக அவமதிப்பு செய்த பாஜக அரசை கண்டித்தும் காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர். ராகுல் காந்தி மீது உத்தரகாண்ட் காவல்துறையினர் வழக்கு பதிவு செய்ததை கண்டித்தும் கண்டனம் முழக்கங்களை எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இந்த ஆர்ப்பாட்டத்தில் காங்கிரஸ் கட்சியின் பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்த நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# மாணவ, மாணவிகள் கல்லூரிகளில் படிக்கும்போதே தங்களின் திறமையை வளர்த்துக்கொண்டு ஆளுமை மிக்கவர்களாக உருவாக வேண்டும்!

## நாமக்கல் மாவட்ட ஆட்சியர் மதுபாலன் அறிவுரை!!



நாமக்கல், செப். 02–

நாமக்கல் கவிஞர் ராமலிங்கம் அரசு மகளிர் கலைக்கல்லூரியில், கல்லூரி மாணவியர் பேரவைத் துவக்க விழா நடந்தது. கல்லூரி முதல்வர் பாரதி வரவேற்றார். நாமக்கல் மாவட்ட ஆட்சியர் மதுபாலன் பேரவையைத் துவக்கி வைத்து பேசியதாவது: கல்லூரிப் பேரவையின் மூலம், 13 துறைகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மாணவப் பிரதிநிதிகள், பதவியில் இருப்பதை மட்டுமே குறிக்கோளாகக் கொள்ளாமல், சக மாணவியரின் குறைகளையும், தேவைகளையும் கேட்டறிந்து, கல்லூரி நிர்வாகத்திற்கு தெரியப்படுத்த வேண்டும். இது நமக்குக் கிடைத்திருக்கும் ஒரு வாய்ப்பு.


துறைத் தலைவர்கள் மற்றும் பேராசிரியர்கள் மூலம், மாணவியரின் தேவைகளை முறையாகக் கொண்டு சென்று, கல்லூரியிலும், மாணவியர் மத்தியிலும், ஆக்கப்பூர்வமான மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும்.

பொதுவாக, கல்லூரியில் படிக்கும் காலம் என்பது, 3 ஆண்டு பட்டப்படிப்பாகவோ அல்லது 2 ஆண்டு முதுகலை படிப்பாகவோ இருக்கும். 3 ஆண்டுகள் கல்லூரியில் எப்படிப் போகிறது என்றே தெரியாது. கல்லூரி நாட்கள் விரைவாக பறந்துவிடும். 3 ஆண்டுகள் என்பது, வெறும் 1,000 நாட்கள் தான். எனவே, நாம் ஒவ்வொரு நாளும், கல்லூரிக்கு வரும்போதும், இந்த, 1,000 நாட்களில் நமது திறமைகளை வளர்த்துக்கொண்டு, எப்படி ஒரு சிறந்த ஆளுமையாக மாற்றிக்கொள்கிறோம் என்பது நம் கையில்தான் இருக்கிறது. இந்த வயதில், உங்கள் ஆளுமையை நீங்கள் எவ்வாறு வளர்த்துக்கொள்கின்றீர்களோ, அது உங்கள் வாழ்நாள் முழுமைக்கும், உங்கள் வாழ்க்கைப் பயணத்தை அமைத்துக்கொள்வதற்கும் மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

நாம் அனைவருமே தலைவர்கள்தான். கல்லூரியை விட்டு வெளியே செல்லும்போது, ஒரு தலைவனுக்குரிய பண்புகளோடும், நல்ல குடிமகனாகவும், சிறந்த ஆளுமை மிக்கவர்களாகவும் வெளியே செல்ல வேண்டும் என்பதுதான் கல்லூரி பேரவையின் நோக்கம் என்று பேசினார். நிகழ்ச்சியில் துறைத்தலைவர்கள், பேராசிரியர்கள், மாணவியர் உள்பட பலர் கலந்துகொண்டனர்.

### நாமக்கல்லில் 4 நாட்கள் நடைபெறும்

# மாநில அளவிலான குத்துசண்டை போட்டியில், 38 மாவட்டங்களை சேர்ந்த 3,000 மாணவ-மாணவிகள் பங்கேற்றுள்ளனர்




நாமக்கல், செப். 02–

நாமக்கல் அருகே வேட்டாம்பாடியில் உள்ள, தனியார் மெட்ரிக் பள்ளியில், பள்ளிக்கல்வி த்துறை சார்பில், மாநில அளவிலான பாரதியார் தின, குடியரசு தின குத்துச்சண்டை போட்டிகள் இன்று துவங்கியது. நாமக்கல் எம்.பி., மாதேஸ்வரன் முன்னிலை வகித்தார். மாவட்ட ஆட்சியர் மதுபாலன் தலைமை வகித்து, போட்டியை துவக்கி வைத்தார்.

நாமக்கல், சேலம், ஈரோடு, தர்மபுரி, கிருஷ்ணகிரி, ஈரோடு, கரூர், திருச்சி, கோவை, சென்னை, கன்னியாகுமாரி உள்பட 38 மாவட்டங்களை சேர்ந்த, 3,000க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் குத்துச்சட்டை போட்டியில் கலந்துகொள்கின்றனர்.

போட்டிகள் அனைத்தும் நாக்அவுட் முறையில் நடக்கிறது. மேலும், 14, 17, 19 வயதிற்கு உட்பட்டோருக்கு, எடை பிரிவுகளில், போட்டிகள் நடத்தப்படுகிறது. மாநில அளவில் முதல் பரிசு தங்கப்பதக்கம், இரண்டாம் பரிசு, வெள்ளி பதக்கம், மூன்றாம் பரிசு வெண்கலப்பதக்கம் வழங்கப்படுகிறது.

மேலும், போட்டியில் பங்கேற்கும் அனைவருக்கும் சான்றிதழ் வழங்கப்படுகிறது. போட்டியில் முதலிடம் பெறும் மாணவ, மாணவியர், தேசிய அளவிலான போட்டியில் பங்கேற்க தகுதி பெறுவார்கள். துவக்க விழாவில் முதன்மை கல்வி அலுவலர் மாதவன், மாநில முதன்மை உடற்கல்வி ஆய்வாளர்கள் கோபாலகிருஷ்ணன், ஜெயலட்சுமி, மாவட்ட உடற்கல்வி ஆய்வாளர் காந்திமதி, டிஇஓக்கள் புருசோத்தமன், பச்சமுத்து, சாந்தி, ரெட்கிராஸ் செயலாளர் ராஜேஸ்கண்ணன் உள்பட பலர் கலந்துகொண்டனர்.



# 12 பாவக்காரகங்கள் 6ஆம் பாவத் தொடர்புகள் விளக்கம்: சாதகமான பாவங்கள் தீமையான பாவங்கள் தெரிந்து கொள்வோம்!




6ம் பாவம் 12 பாவத் தொடர்புகளைக் கொள்ளும் போது கிடைக்கக்கூடிய பலன்கள் எப்படி இருக்கும், குறிப்பாக கிரகங்களின் தொடர்பு, லக்னம், தசைகள் தொடர்பு தரும் பலன்களை விரிவாக தெரிந்து கொள்வோம்.

6ஆம் பாவம் தான் நின்ற நட்சத்திரம் உபநட்சத்திரம் வாயிலாக 3,7,11 பாவங்களைத் தொடர்பு பெற்றால், வேலை மூலமாக (அடிமைத்தொழில்) திருப்தியான மிதமான வருமானம் வரும். வேலை செய்யும் இடத்தில் அனைவரிடமும் இணைந்து செயல்படுவர் மற்றும் நல்ல நண்பர்களை பெறுவர். வேலை அடிக்கடி மாற்றங்களுக்கு உரியதாக இருக்கும்.

6ஆம் பாவத்தில் நோய் என்ற காரகமும் உள்ளதால், 3,7,11 பாவங்களைத் தொடர்பு பெற்றால், நோய்க்கிருமிகள் உடலில் ஓர் இடத்தில் தங்காமல், ஓடிக்கொண்டே இருக்கும். எனவே கிருமிகள் ஓர் இடத்தை தாக்காமல்,மூளைக்கு செய்திகளை வேகமாக அனுப்பி எச்சரிக்கை செய்யும். இந்த தொடர்புகள் நோய் எதிர்ப்புச் சக்தியை பலப்படுத்தும்.

**6ஆம் பாவம் 1,5,9 பாவங்களைத் தொடர்பு பெற்றால்,**

இவை வேலைக்கு எதிரான பாவங்கள் என்பதால்,வேலை அற்ற நிலையும், பொறுப்பற்ற நிலையும் உருவாகும். வேலைக்கும், உடல் உழைப்புக்கும் எதிரான பாவங்களை 6ஆம் பாவம் தொடர்பு கொள்கிறது . எனவே எந்த உழைப்பையும் செய்யாமல் இருக்கும் நிலையை குறிக்கும்.

6ஆம் பாவம் தன் பாவத்திற்கு 4,8,12ம் பாவங்களையும், ஜாதகருக்கு மிகவும் மகிழ்ச்சியை தரும் பாவங்களையும் 6ஆம் பாவம் தொடர்பு கொள்வதால், 6ஆம் பாவம் தன் பாவப் பலனை முற்றிலும் இழக்கிறது. எனவே 6ஆம் பாவ உறுப்புகள் (வயிறு சார்ந்தவை ) இயற்கைத் தன்மையை பெறும். நோய்க்கிருமிகள் குறைந்த எண்ணிக்கையில் இருக்கும். இதனால் எதிர்ப்புத் திறனும், ஆரோக்கியமும் சிறப்படைந்து, நோய் வருவது குறையும். இயற்கையான உணவுகளை உண்பர். மருந்துகளற்ற ஆரோக்கியமான வாழ்க்கையை வாழ முடியும்.

ஆனால் வேலை மற்றும் கடமை என்பது சுத்தமாக மறுக்கப்படும்.

தசை மற்றும் லக்னம், நிறைய கிரகங்கள் 2,4,6,10ம் தொடர்பு பெற்றால் முக்கியமாக 5,9 பாவங்களைக் கட்டுப்படுத்தும் 4 ஆம் பாவத்தினைத் தொடர்பு பெற்றால் 1,5,9–ன் வலிமை குறையும்.

**6ஆம் பாவத்தின் 2,4,6,10 பாவங்களின் தொடர்புகள்**

உடல் உழைப்பினை அர்த்தமுள்ளதாக மாற்றி, நல்ல உயர்வைப் பெறுவர். படிப்படியாக பொருளாதாரம், பதவிகள், கௌரவமான தலைமைப் பதவி ஆகியவை உண்டாகும். தன் முழுமையான திறமையும் பயன்படுத்தி முதன்மை நிலைக்கு வருவார். அதாவது எதிலும் வெற்றி என்ற ஒரே இலக்கோடு, மற்றவரை வீழ்த்தி, முதன்மை நிலைக்கு வருதல், தன் வேலைக் காரர்களை தகுந்த முறையில் பயன்படுத்தி தன் பொருளாதாரத்தை உயர்த்திக் கொள்ளுதல், திறமை மிக்க வேலைக்காரர்கள் அமைதல், கடன் பெற்று அதனை பொறுப்பாக தன் தொழிலை விரிவு படுத்துதல் ஆகியவை இதன் சிறப்பாகும். லக்னம், பல கிரகங்கள், தசைகள் ஒற்றைப்படட பாவங்களைத் தொடர்பு கொண்டால் இதன் வலிமை குறையும்.

**6 ஆம் பாவம் 12 ஆம் பாவத்தையும் கட்டுப்படுத்தும்.**

2,4,6,10 தொடர்புகள் தன் வேலையில் திடமான தீர்மானம், திட்டமிடல், ஒழுங்குபடுத்தல், ஆணையிடுதல் உள்ள அமைப்புகளைத் தரும் . பொதுவாக 8,12 பாவங்கள் பிரட்சனைகளைத் தரும் பாவங்கள் என்பதால், 2 ஆம் பாவம் 8 ஆம் பாவத்தையும் மற்றும் 6 ஆம் பாவம் 12 ஆம் பாவத்தையும் கட்டுப்படுத்தும்.

4ஆம் பாவத்தொடர்பு, நிலையான நோயினை உடல் பெறுவதை குறிக்கும். 6ஆம் பாவத்தின் 4ஆம் பாவத்தொடர்பு மிகவும் வலிமையான அமைப்பு. கடினமான ஓய்வில்லாமல் உழைப்பு என்பதால் உணவு ஆரோக்கியம் இதில் கவனம் இல்லாமல் ஏதேனும் நோய் தொடர்ந்து இருக்கும். எளிதில் ஜீரணம் ஆகாத உணவுகள் மற்றும் கலோரிகள் அதிகம் உள்ள உணவுகள் உண்ணும் பழக்கம் இருக்கும். வயிறு பகுதி பெரியதாக இளகுதன்மை இல்லாமல் இருக்கும்.

**30 வயதில் உயர்வு இருக்கும்**

10ஆம் பாவம் ,6ஆம் பாவத்தின் திரிகோண பாவம், இது லக்னத்திற்கு 70% சாதகமான பாவம் என்பதால் நோய் கிருமிகளால் உடலுக்கு எந்த பாதிப்பும் இல்லை. ஆனால் இந்த 10 ஆம் பாவம் 11 ஆம் பாவத்திற்கு விரய பாவம் (12ஆம்பாவம்) என்பதால் 11ஆம் பாவம் உடல் உறுதியை (Stamina) குறிப்பதால், இந்த தொடர்பு உடலின் உறுதித்தன்மையை குறைக்கும்.

ஆனால் புற வாழ்க்கை மிகவும் சிறப்பாக இருக்கும்.இது பெரிய வேலையாட்களை ஆட்சி செய்யும் அமைப்பு. தன் 30 வயதிலேயே "Green ink" ல் கையெழுத்திடும் நிலைக்கு உயர் பதவியில் அமர்வார்.

**6ஆம் பாவத்தின் 8,12 பாவங்களின் தொடர்புகள்**

இவைகள் 6ஆம் பாவத்திற்கு சாதகமான பாவங்கள் என்றாலும், அவை லக்னத்திற்கு மிகவும் தீமையான பாவங்கள் என்பதால் வேலையில் ஜாதகருக்கு அசிங்கம், அவமானம், வேலை இழப்பு போன்றவை உருவாகும். 6ஆம் பாவத்தின் 8ஆம் பாவத் தொடர்பு மிகவும் மோசமான அமைப்பு. மரணமும் நடக்கலாம். நம்மை விட பலம் குறைந்தவர்களிடம் தோற்பது வேலைக்காரர்களால் ஏமாற்றப்பட்டு பொருள்களை இழப்பது மற்றும் உணவால் பாதிப்பு,நுண் கிருமிகளால் நோய்களால் பாதிக்கப்படுவர்.

அதேபோல் மிகவும் கடினமான வேலைகள் மற்றும் கௌரவ குறைச்சலான வேலைகளை செய்வார்கள். அதிகமான வேலைகளை குறைந்த சம்பளத்திற்கு செய்வார்கள்.


**ஆரோக்கியம் மீதான தாக்கம்**

6ஆம் பாவத்தின் அகக் காரகங்கள், ஜாதகருக்கு வலி வேதனைகளைத் தரும். 8,12 பாவங்கள் மறைவு ஸ்தானங்கள் என்பதால், இந்த தொடர்பு ஜாதகரால் புரிந்து கொள்ள முடியாத நோயினைக் குறிக்கும் .8ஆம் பாவம் 6ஆம் பாவத்தின் பரிணாம பாவம் என்பதால் ஒன்றிற்கு மேற்பட்ட நோய்களையும், நோய்க் கிருமிகள் பல மடங்கு பெருகி, தீராத நோயாக மாறுவதையும் குறிக்கும்.

லக்னம், தசை, பல கிரகங்கள் 3,7,11 பாவங்களைத் தொடர்பு கொண்டால், சிறப்பான அமைப்பாக இருக்கும். 8,12 ஆல் வரும் வலி வேதனைகளைக் கட்டுப்படுத்தும். 8,12 உடன் 2,6ம் பாவங்கள் சேர்ந்து வருவதும் பிரச்சனையை சற்று கட்டுப்படுத்தும்.

6ஆம் பாவத்தின் 12ஆம் பாவத்தொடர்பால், ஜீரணக்கோளாறு, வேலைக்காரர்கள் பிரச்சனை, வேலை இழப்பு (Dismiss), உள் நோயாளி அதாவது மருத்துவமனையில் தங்கி சிகிச்சை பெறுதல் (In– Patient) ஆகியவற்றை கொடுக்கும்.

# பழனி ரெயில் நிலையத்தில் பயணிகளின் உடைமைகளை பாதுகாக்க டிஜிட்டல் லக்கேஜ் லாக்கர் வசதி!




பழனி, செப். 02–

பழனி ரெயில் நிலையத்தில் பயணிகளின் உடைமைகளை பாதுகாக்க ஏழு லட்சத்தில் டிஜிட்டல் லக்கேஜ் லாக்கர் வசதி நேற்று முதல் பயன்பாட்டுக்கு கொண்டுவரப்பட்டது. இதன் திறப்பு விழாவில் நிலைய கண்காணிப்பாளர் சுனில் தலைமை தாங்கினார். வணிக பிரிவு ஆய்வாளர் அசோக் ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார். நிகழ்ச்சி ஏற்பாடுகளை டிஜிட்டல் லாக்கர் மையத்தின் மேலாளர் சண்முகசுந்தரம் செய்திருந்தார். அதன் பின்பு ரெயில் நிலையத்திற்கு வந்த பயணிகளுக்கு டிஜிட்டல் லாக்கரை பயன்படுத்தும் விதம் குறித்து அதிகாரிகள் எடுத்துரைத்தனர். இதில் ரெயில்வே பாதுகாப்பு படை சப் இன்ஸ்பெக்டர் கணேசன் உள்பட ரயில்வே ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

## நலம் நலமறிய..! மருத்துவ குறிப்புகள்



# குழந்தைகளுக்கு சுவையா... இல்லை விஷமா? பெற்றோர்களே உஷார்!




இன்றைய நவீன வாழ்க்கை முறையில் குழந்தைகள் விரும்பி சாப்பிடும் பாக்கெட் சிப்ஸ், குளிர்பானங்கள், பதப்படுத்தப்பட்ட தின்பண்டங்கள் ஆகியவை அன்றாட உணவின் ஒரு பகுதியாக மாறிவிட்டன. ஆனால், சுவைக்காக குழந்தைகளுக்கு தொடர்ந்து வழங்கப்படும் இந்த உணவுகள், அவர்களின் உடல் நலனில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தக்கூடும் என எச்சரிக்கப்படுகிறது.

பாக்கெட் சிப்ஸ் உள்ளிட்ட பல பதப்படுத்தப்பட்ட தின்பண்டங்களில் அதிகளவு உப்பும் கலோரிகளும் இருப்பதால், அவற்றை அடிக்கடி சாப்பிடுவது குழந்தைகளின் உடல் எடை அதிகரிப்புக்கு வழிவகுக்கலாம்.

**இதற்கு பதிலாக என்ன கொடுக்கலாம்?**

பாக்கெட் உணவுகளுக்குப் பதிலாக வீட்டிலேயே வறுத்த கொண்டைக்கடலை, தாமரை விதை எனப்படும் மக்கானா போன்ற ஆரோக்கியமான சிற்றுண்டிகளை குழந்தைகளுக்கு வழங்கலாம்.

அதேபோல், அதிக சர்க்கரை சேர்க்கப்பட்ட பாக்கெட் பழச்சாறுகள், சோடா மற்றும் குளிர்பானங்களுக்குப் பதிலாக வீட்டில் புதிதாக தயாரிக்கப்படும் பழச்சாறு அல்லது பசும்பால் வழங்குவது சிறந்த தேர்வாகும்.

**பிஸ்கட், கேக் கூட ஆபத்தா?**

பெரும்பாலான வீடுகளில் சாதாரண சிற்றுண்டியாகக் கருதப்படும் பிஸ்கட், கேக், டோனட் போன்றவற்றிலும் அதிகளவு கொழுப்பும் தேவையற்ற சர்க்கரையும் இருக்கக்கூடும்.

“பிஸ்கட் சிறியதாகத்தானே இருக்கிறது... அதனால் பாதிப்பு இருக்காது” என்று நினைப்பது தவறு. இவற்றுக்கு மாற்றாக நற்பழங்கள் மற்றும் வீட்டிலேயே தயாரிக்கப்படும் ஆரோக்கியமான தின்பண்டங்களை வழங்குவது நல்லது.

அவசர நேர உணவாக உருவாக்கப்பட்ட இன்ஸ்டன்ட் நூடுல்ஸ் மற்றும் பதப்படுத்தப்பட்ட சிற்றுண்டிகளும் அன்றாட உணவுக்கு மாற்றாகிவிடக் கூடாது. முடிந்தவரை இவற்றைத் தவிர்த்து, பருப்பு வகைகள், காய்கறிகள் மற்றும் முழு தானியங்களை குழந்தைகளின் உணவில் அதிகம் சேர்க்க வேண்டும்.

**பர்கர், பீட்சா... எப்போதாவது மட்டும்!**

பர்கர், பீட்சா உள்ளிட்ட எண்ணெயில் பொரித்த துரித உணவுகள் குழந்தைகளுக்கு மிகவும் பிடித்தவையாக இருந்தாலும், அவற்றை அடிக்கடி வழங்காமல் எப்போதாவது மட்டும் அனுமதிப்பது நல்லது.

குழந்தைகளின் உடல் பருமனுக்கு பாக்கெட் உணவுகள் மட்டுமே காரணம் அல்ல. போதிய உடற்பயிற்சியின்மை மற்றும் மாறிவரும் வாழ்க்கை முறையும் முக்கிய காரணிகளாக உள்ளன. எனவே, சிறுவயதிலிருந்தே குழந்தைகளுக்கு ஆரோக்கியமான உணவுப் பழக்கத்தை உருவாக்க வேண்டும். அதோடு, திறந்தவெளி விளையாட்டு மற்றும் உடற்பயிற்சியில் அவர்கள் ஈடுபடுவதையும் பெற்றோர் ஊக்குவிக்க வேண்டும்.

சுவையைவிட ஆரோக்கியமே முக்கியம்... குழந்தைகளின் உணவில் பெற்றோர் கூடுதல் கவனம் செலுத்த வேண்டிய நேரம் இது!

# விமானப்படையில் புதிய வரலாறு! முதல் பெண் துணைத் தளபதி சக்தி சர்மா!!



புதுடில்லி. செப். 02–

இந்திய விமானப்படையின் மருத்துவம் அல்லாத பிரிவில் முதல் பெண் துணைத் தளபதியாக ஏர் வைஸ் மார்ஷல் சக்தி சர்மா நியமிக்கப்பட்டுள்ளார். இதன் மூலம் இந்தியப் பாதுகாப்புப் படைகளில் புதிய வரலாற்றுச் சாதனை படைக்கப்பட்டுள்ளது. டில்லி விமானப்படைத் தலைமையகத்தில், விமானப்படைத் தலைமை அதிகாரியின் உதவித் தலைவராக சக்தி சர்மா பொறுப்பேற்றுள்ளார்.

**யார் இந்த சக்தி சர்மா?**

1994 ஜூன் 18: இந்திய விமானப்படையின் கல்விப் பிரிவில் அதிகாரியாக நியமனம்.

பயிற்சி நிறுவனங்கள், விமானப்படைத் தலைமையகங்கள் உள்ளிட்ட பல்வேறு முக்கியப் பொறுப்புகளில் பணியாற்றியுள்ளார். முப்படைகளில் இருந்து சைனிக் பள்ளிக்குத் தலைமை தாங்கிய முதல் பெண் அதிகாரி என்ற பெருமையையும் பெற்றுள்ளார். இதற்கு முன்பு ஏர் கமோடோர் பதவி வகித்தார்.

தற்போது ஏர் வைஸ் மார்ஷல் பதவிக்கு உயர்ந்துள்ளார். இந்தியப் பாதுகாப்புப் படைகளில் மருத்துவப் பின்னணி இல்லாமல் ஏர் வைஸ் மார்ஷல் பதவியைப் பெற்ற முதல் பெண் அதிகாரி என்ற பெருமையையும் பெற்றுள்ளார். விமானப்படையின் கல்வி தொடர்பான பொறுப்புகளை மேற்பார்வையிட உள்ளார்.

# “30 நிமிடத்திற்கு ஒரு படம்... பேரிடருக்கு முன்பே எச்சரிக்கை!” ‘EOS-05’!

புதுடில்லி, செப். 02–

இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனமான இஸ்ரோ, அதிநவீன புவி கண்காணிப்பு செயற்கைக்கோளான EOS–05 (GI-SAT–1A)–ஐ வரும் செப்டம்பர் 4–ம் தேதி அதிகாலை 2.55 மணிக்கு விண்ணில் செலுத்த திட்டமிட்டுள்ளது. இந்த முக்கியமான விண்வெளி ஏவுதல், ஆந்திரப் பிரதேசம் ஸ்ரீஹரி கோட்டாவில் அமைந்துள்ள சதீஷ் தவான் விண்வெளி மையத்தில் இருந்து GSLV–F17 ராக்கெட் மூலம் மேற்கொள்ளப்பட உள்ளது.



**அதிநவீன புவி கண்காணிப்பு செயற்கைக்கோள்**

ஜிசாட்–1ஏ என அழைக்கப்படும் EOS–05, இஸ்ரோ உருவாக்கியுள்ள மேம்பட்ட புவி கண்காணிப்பு செயற்கைக்கோள் ஆகும். பூமியை தொடர்ந்து கண்காணித்து, தேவையான தகவல்களையும் உயர்தரப் படங்களையும் வழங்கும் வகையில் இந்த செயற்கைக்கோள் வடிவமைக்கப்பட்டுள்ளது.

விண்ணில் செலுத்தப்பட்ட பிறகு, இந்த செயற்கைக்கோள் பூமியிலிருந்து சுமார் 36,000 கிலோமீட்டர் உயரத்தில் உள்ள புவிநிலை சுற்றுப்பாதையில் நிலைநிறுத்தப்படும்.

**பேரிடர்களை முன்கூட்டியே கண்காணிக்கும் திறன்**

EOS–05 செயற்கைக்கோளின் முக்கியமான பயன்பாடுகளில் ஒன்று, இயற்கைப் பேரிடர்களை கண்காணிப்பதாகும். குறிப்பாக வெள்ளம், புயல் உள்ளிட்ட இயற்கை பேரிடர்களை முன்கூட்டியே கண்காணிக்கவும், அவற்றால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை மதிப்பிடவும் இந்த செயற்கைக்கோள் உதவும். மேலும், பேரிடர் ஏற்படும் நேரங்களில் நிலைமையை விரைவாக அறிந்து, மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை சிறப்பாக திட்டமிடவும் இதன் தரவுகள் உதவியாக இருக்கும்.

**30 நிமிடத்திற்கு ஒருமுறை பூமியின் படம்!**

இந்த செயற்கைக்கோளின் மற்றொரு முக்கிய சிறப்பு, புவியை தொடர்ந்து படமெடுக்கும் திறன் ஆகும்.

சுமார் 30 நிமிட இடைவெளியில் கிட்டத்தட்ட நிகழ்நேர புவிப்படங்களை வழங்கும் திறன் EOS–05–க்கு உள்ளது.

இதன் மூலம் இந்தியாவின் நிலப்பரப்பு, வானிலை மாற்றங்கள், இயற்கைப் பேரிடர்கள் உள்ளிட்ட பல்வேறு நிகழ்வுகளை விரைவாக கண்காணிக்க முடியும். இந்தியாவுக்கு பூமியின் நிலப்பரப்பை ஒரு தனித்துவமான கோணத்தில் தொடர்ந்து பார்க்கக்கூடிய வசதியை வழங்கும் நோக்கத்திலும் இந்த செயற்கைக்கோள் உருவாக்கப்பட்டுள்ளது.

**2021 தோல்விக்குப் பிறகு புதிய முயற்சி**

EOS–05 திட்டத்தின் பின்னணியில் ஒரு முக்கியமான வரலாறும் உள்ளது.

இதன் முந்தைய வடிவமான ஜிசாட்–1 (EOS–03) செயற்கைக்கோளை இஸ்ரோ கடந்த 2021–ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம்விண்ணில் செலுத்த முயன்றது. ஆனால் அந்த ஏவுதலின்போது, ராக்கெட்டின் கிரையோஜெனிக் அடுக்கில் ஏற்பட்ட கோளாறு காரணமாக செயற்கைக்கோள் திட்டமிட்ட சுற்றுப்பாதையை அடைய முடியாமல் போனது. இதனால் அந்த விண்வெளித் திட்டம் தோல்வியில் முடிந்தது. அந்த அனுபவத்தின் அடிப்படையில், தற்போது புதிய தொழில்நுட்பங்களை பயன்படுத்தி, மேம்படுத்தப்பட்ட வடிவில் ஜிசாட்–1ஏ எனப்படும் EOS–05 செயற்கைக்கோள் உருவாக்கப்பட்டுள்ளது.

**7 மாத இடைவெளிக்குப் பிறகு இஸ்ரோ மீண்டும் களம்!**

இந்நிலையில், கடந்த 7 மாதங்களாக எந்தவொரு செயற்கைக்கோளையும் ஏவாமல் இஸ்ரோ தற்காலிக இடைவெளியில் இருந்தது. இந்த நீண்ட இடைவெளிக்குப் பிறகு, EOS–05 செயற்கைக்கோளை விண்ணில் செலுத்துவதன் மூலம் இஸ்ரோ தனது விண்வெளி ஏவுதல் நடவடிக்கைகளை மீண்டும் தொடங்குகிறது. எனவே, செப்டம்பர் 4–ம் தேதி அதிகாலை நடைபெற உள்ள இந்த ஏவுதல், ஒரு செயற்கைக்கோளை விண்ணில் செலுத்தும் நிகழ்வாக மட்டுமின்றி, இந்தியாவின் புவி கண்காணிப்பு திறனையும், பேரிடர் மேலாண்மை நடவடிக்கைகளையும் மேலும் வலுப்படுத்தும் முக்கியமான விண்வெளி முயற்சியாகவும் பார்க்கப்படு கிறது. 30 நிமிடத்திற்கு ஒருமுறை பூமியை கண்காணிக்கும் திறன்... பேரிடர்களை முன்கூட்டியே அறியும் வசதி... 36,000 கி.மீ. உயரத்தில் புவிநிலை சுற்றுப்பாதை... செப்.4 அதிகாலை 2.55 மணிக்கு விண்ணில் பாயும் EOS–05 மீது அனைவரின் கவனமும் திரும்பியுள்ளது.

# மத்திய அரசு ஊழியர்களுக்கு தீபாவளிக்கு முன் “மெகா குட் நியூஸ்!

புதுடில்லி, செப். 02–

மத்திய அரசு ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களுக்கான 2–வது அகவிலைப்படி (DA) உயர்வு குறித்த முக்கிய தகவல் வெளியாகியுள்ளது.




ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி, ஜூலை மாதங்களில் அகவிலைப்படி உயர்வு நடைமுறைக்கு வரும். தற்போது 60% DAவழங்கப்பட்டு வரும் நிலையில், புதிய தரவுகளின் அடிப்படையில் இது 64% ஆக உயர வாய்ப்புள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

தொழிலாளர் பணியகம் வெளியிட்ட AICPI–IW தரவின்படி, ஜூலை 2026 குறியீடு 1.3 புள்ளிகள் உயர்ந்து 153.2 ஆக உள்ளது. ஜூலை 2026 ஆண்டுளாவிய பணவீக்கம் 4.57% ஆக பதிவாகியுள்ளது; கடந்த ஆண்டு ஜூலையில் இது 2.66%ஆக இருந்தது.

12 மாதங்களின் சராசரி பணவீக்கக் குறியீட்டின் அடிப்படையில் கணக்கிடும்போது DA சுமார் 64.38% ஆக வருகிறது. அரசு தசமத்தை முழு எண்ணாக கணக்கிட்டால், 64% DA நிர்ணயிக்கப்பட வாய்ப்புள்ளது.

**ரூ.18,000 அடிப்படை சம்பளத்திற்கு எவ்வளவு?**

7–வது ஊதியக் குழு விதிப்படி DA கணக்கிடப்படுகிறது. குறைந்தபட்ச லெவல்–1 அடிப்படை சம்பளம் ரூ.18,000 உள்ள ஊழியருக்கு 64% DA என்றால், ரூ.11,520 அகவிலைப்படியாக கிடைக்கும். அடிப்படை சம்பளம் அதிகமாக உள்ள உயர் பதவி ஊழியர்களுக்கு, மாத சம்பளத்தில் அதற்கேற்ப குறிப்பிடத்தக்க உயர்வு கிடைக்கும்.

தீபாவளியை முன்னிட்டு அறிவிப்பு வெளியாக வாய்ப்புள்ளது. ஆனால் அதிகாரப்பூர்வ அறிவிப்பு பின்னர் வந்தாலும், உயர்வு ஜூலை 1, 2026 முதல் முன்தேதியிட்டு, அதற்கான அரியர் தொகையும் வழங்கப்படும். பணவீக்கத் தரவுகளின் அடிப்படையில் மத்திய தொழிலாளர் அமைச்சகம் பரிந்துரை வழங்கும். பின்னர் மத்திய அமைச்சரவையின் அதிகாரப்பூர்வ ஒப்புதலுக்குப் பிறகே இறுதி உத்தரவு வெளியாகும். 8–வது சம்பள கமிஷன் தாமதம் குறித்த கவலையில் இருக்கும் லட்சக்கணக்கான ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களுக்கு, இந்த DA உயர்வு நம்பிக்கையளிக்கும் செய்தியாக அமையுமா? என்ற எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது.

# “12 வாரம் இனி இல்லை... 365 நாள் முழு சம்பள விடுப்பு!”தமிழக அரசு அதிரடி அரசாணை!

சென்னை, செப். 02–

மூன்றாவது குழந்தை பெறும் திருமணமான பெண் அரசு ஊழியர்களுக்கான முழு ஊதியத்துடன் கூடிய மகப்பேறு விடுப்பு 12 வாரங்களில் இருந்து 365 நாள்களாக உயர்த்தப்பட்டுள்ளது. மனிதவள மேலாண்மைத் துறை முதன்மைச் செயலர் சமயமூர்த்தி இதற்கான அரசாணையை வெளியிட்டுள்ளார்.



**முக்கிய அம்சங்கள்:**

2021–ம் ஆண்டு அரசாணையின்படி, 2 குழந்தைகள் கொண்ட திருமணமான பெண் அரசு ஊழியர்களுக்கான மக ப்பேறு விடுப்பு 270 நாள்களில் இருந்து 365 நாள்களாக உயர்த்தப்படுகிறது.

2026 மார்ச் அரசாணையின்படி, 2–க்கும் மேற்பட்ட குழந்தைகள் கொண்ட பெண் அரசு ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட 12 வார விடுப்பு, தற்போது 365 நாள்களாக உயர்த்தப்பட்டுள்ளது.

ஆகஸ்ட் 18–ல் மானியக் கோரிக்கையின்போது மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் சரத்குமார் இதற்கான அறிவிப்பை வெளியிட்டிருந்தார்.

**விடுப்பு முழு ஊதியத்துடன் வழங்கப்படும்**

குழந்தை பிறப்பதற்கு முந்தைய ஓய்வு காலம் முதல், குழந்தை பிறந்த பிறகு உடல்நலம் தேறும் காலம் வரை, ஊழியரின் விருப்பத்துக்கு ஏற்ப விடுப்பை பயன்படுத்தலாம்.

ஆகஸ்ட் 25–க்கு முன்பே 3–வது குழந்தைக்காக மகப்பேறு விடுப்பில் சென்று, அன்றும் தொடர்ந்து விடுப்பில் இருந்த பெண் அரசு ஊழியர்களுக்கும் இந்தச் சலுகை பொருந்தும். அவர்கள் ஏற்கெனவே எடுத்த விடுப்பையும் சேர்த்து, மொத்தம் 365 நாள்களுக்கு மிகாமல் மகப்பேறு விடுப்பு பெறலாம்.

நிரந்தர மற்றும் தற்காலிகப் பணியில் உள்ள திருமணமான பெண் அரசு ஊழியர்களுக்கும் இந்த சலுகை பொருந்தும்.

# “கேமரா போனுக்கு நோ என்ட்ரி... சாதாரண போனுக்கு மட்டும் ஓகே!”

சென்னை, செப். 02–

தமிழகத்தில் உள்ள 52 முக்கியக் கோயில்களில் செல்போன் தடை நேற்று முதல் தீவிரமாக அமலுக்கு வந்துள்ளது. கோயில்களின் புனிதத்தன்மையைப் பாதுகாக்கவும், பக்தர்கள் இடையூறின்றி தரிசனம் செய்யவும் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. திருவல்லிக்கேணி பார்த்தசாரதி, மயிலாப்பூர் கபாலீஸ்வரர், வடபழனி முருகன் உள்ளிட்ட கோயில்களில் நுழைவாயில்களிலேயே செல்போன் பாதுகாப்பு அறைகள் அமைக்கப்பட்டு, ரூ.5 கட்டணத்தில் போனை ஒப்படைத்து டோக்கன் பெறும் வசதி செய்யப்பட்டுள்ளது. தடையை மீறி செல்போன் கொண்டு சென்றவர்களுக்கு முதல் நாளில் எச்சரிக்கை விடுக்கப்பட்டது. தொடர்ந்து மீறினால் செல்போன் பறிமுதல் செய்யப்பட்டு,




காவல்துறையில் புகார் அளித்து அபராதம் விதிக்கப்படும் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் ரமேஷ் வெளியிட்ட விளக்கத்தில், கேமரா வசதி இல்லாத சாதாரண செல்போன்களை கோயிலுக்குள் கொண்டு செல்ல தடை இல்லை எனத் தெரிவித்துள்ளார்.




**இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்**

127, T.P.K.ரோடு, மதுரை.
Ph: 98659 88882

மதுரை to சென்னை
ரெகுலர் சர்வீஸ்
பஸ் மற்றும் பார்சல்
சர்வீஸ் உள்ளது

சென்னை
Ph: 98659 88881


# வேலை வாய்ப்பு

## BEML–ல் 1,346 அப்ரண்டிஸ் பயிற்சி வாய்ப்புகள்!

BEML Limited சார்பில் 1,346 Apprentice பணியிடங்களுக்கான அறிவிப்பு வெளியாகியுள்ளது.

பயிற்சி காலம்: 1 ஆண்டு
பிரிவுகள்: Graduate Engineering, Graduate (General), Diploma, ITI
பணியிடம்: பெங்களூரு
விண்ணப்ப தொடக்கம்: 18.08.2026
கடைசி நாள்: 08.09.2026
விண்ணப்ப முறை: ஆன்லைன்– https://recruitment.bemlindia.in/
அறிவிப்பு எண்: L&D/01/2026
அதிகாரப்பூர்வ இணையதளம்: BEML Recruitment Portal

## விசாகப்பட்டினம் Ship Building Centre–ல் வேலைகள்!

Ship Building Centre சார்பில் 9 காலிப்பணியிடங்களுக்கு வேலைவாய்ப்பு அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

பணியிடங்கள்: Construction Assistant ‘A’, Construction Handler, Fire Engine Driver, Motor Transport Driver
பணி வகை: ஒப்பந்த அடிப்படையிலான பணி
பணியிடம்: விசாகப்பட்டினம்
விண்ணப்ப தொடக்கம்: 22.08.2026
கடைசி நாள்: 14.09.2026
விண்ணப்ப முறை: ஆன்லைன்–https://sbcrecruitment.in/
அறிவிப்பு எண்: 3201/2026
அதிகாரப்பூர்வ இணையதளம்: SBC Recruitment Portal

## BHEL திருச்சியில் 530 அப்ரண்டிஸ் பயிற்சி வாய்ப்புகள்!

Bharat Heavy Electricals Limited சார்பில் 530 Apprentice பணியிடங்களுக்கான பயிற்சி வாய்ப்பு அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரிவுகள்: Trade Apprentice, Technician (Diploma) Apprentice, Graduate Apprentice
பயிற்சி காலம்: 1 ஆண்டு
பணியிடம்: திருச்சி
விண்ணப்ப தொடக்கம்: 14.08.2026 பிற்பகல் 3.00 மணி
கடைசி நாள்: 12.09.2026 இரவு 11.45 மணி
விண்ணப்ப முறை: ஆன்லைன்– https://trichy.bhel.com/
அதிகாரப்பூர்வ இணையதளம்: BHEL Trichy

## இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் 25 பாதுகாப்புக் காவலர் பணிகள்!

Indian Overseas Bank சார்பில் தமிழ்நாட்டில் 25 Security Guard பணியிடங்களுக்கான வேலைவாய்ப்பு அறிவிப்பு வெளியாகியுள்ளது.

பணி: Security Guard
பணி வகை: நிரந்தரப் பணி
பணியிடம்: தமிழ்நாடு
விண்ணப்ப தொடக்கம்: 25.08.2026
கடைசி நாள்: 14.09.2026
விண்ணப்ப முறை: ஆன்லைன்–: https://www.iob.bank.in/
அறிவிப்பு எண்: HRMD/SS/RECT/01/2026–27
அதிகாரப்பூர்வ இணையதளம்: Indian Overseas Bank

## SECI–ல் 28 மத்திய அரசு உயர்பதவி வேலைவாய்ப்புகள்!

Solar Energy Corporation of India Limited சார்பில் 28 நிரந்தர பணியிடங்களுக்கு வேலைவாய்ப்பு அறிவிப்பு வெளியாகியுள்ளது.

பணியிடங்கள்: Engineer, Senior Engineer, Officer, Accounts Officer, Deputy Manager, DGM, GM
பணி வகை: நிரந்தரப் பணி
பணியிடம்: இந்தியா முழுவதும்
விண்ணப்ப தொடக்கம்: 25.08.2026 காலை 11.00 மணி
கடைசி நாள்: 23.09.2026 மாலை 5.00 மணி
விண்ணப்ப முறை: ஆன்லைன்– https://www.seci.co.in/
அறிவிப்பு எண்: 03/2026
அதிகாரப்பூர்வ இணையதளம்: SECI

## CSIR–ல் 43 மத்திய அரசு தொழில்நுட்பப் பணியிடங்கள்!

Council of Scientific and Industrial Research சார்பில் Technician (1) பணிக்கான 43 காலியிடங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

பணி: Technician (1)
பணி வகை: நிரந்தரப் பணி
பணியிடம்: புதுடெல்லி
விண்ணப்ப தொடக்கம்: 18.08.2026
கடைசி நாள்: 17.09.2026
விண்ணப்ப முறை: ஆன்லைன்– https://www.csir.res.in/
அறிவிப்பு எண்: R&A/01/2026
அதிகாரப்பூர்வ இணையதளம்: CSIR Official Website.




2331731
4377877
எண்ணெய்ப் பலகாரம்
தமிழ் நாட்டு வகை காரம் & இனிப்பு
மற்றும் வட மாநில இனிப்பு
தயாரிப்பு & விற்பனை நிலையம்
92, திருப்பரங்குன்றம் சாலை மற்றும் கிளைகள்

# இன்றைய கார்ட்டூன்




# மழைக்காலங்களில் கட் அவுட், பேனர்கள் வைக்க தடை!

சென்னை, செப். 02–

பருவ மழையை முன்னிட்டு பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்து வரும் அமைச்சர் என்.ஆனந்த் மழைக்காலம் வருவதால் ஆங்காங்கே வைக்கப்பட்டிருக்கும் பேனர்களை, கட் அவுட்களை அகற்ற வேண்டும் என நிர்வாகிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

இது குறித்து த.வெ.க.வினருக்கு அமைச்சர் என்.ஆனந்த், நம் தலைவரும் முதலமைச்சருமான விஜய் பொது மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் எந்த செயலிலும் த.வெ.க.வினர் ஈடுபட கூடாது.

பேனர்கள், கட் அவுட்கள் வைத்து பொதுமக்களுக்கு சிரமத்தை ஏற்படுத்தக் கூடாது என உத்தரவிட்டு உள்ளார்.



எனவே பருவமழை தொடங்க இருக்கும் நேரத்தில் தங்களது பகுதியில் ஏதேனும் கட் அவுட்கள் மற்றும் பேனர்கள் வைத்திருந்தால் உடனடியாக அகற்றி விட வேண்டும்.

பேனர்களால் பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்பட கூடாது. மழைக் காலங்களில் பொது மக்களுக்கு த.வெ.க.வினர் பாதுகாப்பாக இருந்து பல்வேறு உதவிகள் செய்ய வேண்டும். மக்கள் பாது காப்பே நமக்கு முக்கியம் என அமைச்சர் என்.ஆனந்த் நிர்வாகிகளுக்கு அறிவுறுத்தி உள்ளார்.

# நாக தோஷம்... ஜலதோஷம்... சட்டசபையில் கலகல விவாதம்!

சென்னை, செப். 02–

தமிழ்நாடு சட்டசபையில் வினாக்கள் விடை நேரம் நடைபெற்று வருகிறது. முதலில் சுகாதாரத்துறை தொடர்பாக உறுப்பினர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு சுகாதாரத்துறை அமைச்சர் அருண்ராஜ் பதில் அளித்து வருகிறார்.



தி.மு.க. எம்.எல்.ஏ.ஓ.பன்னீர் செல்வம் பேசுகையில், சட்டசபை ஆரம்பித்து அமைச்சர் பாம்பு கடி தொடர்பாக உரிய விளக்கத்தை அளித்து வருகிறார். இன்றைக்கு நான் அறிந்தது, பல்வேறு நிறைய தொகுதிகளில் பாம்பு கடி உள்ளதாக அறிகிறேன். அந்த தொகுதிகளில் எல்லாம் தோஷம் இருப்பதாக நான் அறிகிறேன். ஆகவே, பேரவை தலைவர் முன்பாக மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர், நாகதோஷம் கழிப்பதற்கு ஏதாவது பிரார்த்தனைகள் இருந்தால் அதனை நிவர்த்தி செய்ய வேண்டும் என்றார்.

இதற்கு பதில் அளித்த அமைச்சர் அருண்ராஜ், முதலமைச்சர் தலைமையிலான அரசு அறிவியல் பூர்வமான அரசாக மேற்கொண்டு இருக்கிறோம். தோஷம், பில்லி சூனியம் எல்லாம் நம்பிக்கை இல்லை. உறுப்பினருக்கு நம்பிக்கை இருந்தால் உங்களுடைய தொகுதிக்கு தோஷம் நிவர்த்தி மேற்கொள்ளலாம். மாநில அளவில் அறிவியல் பூர்வமான முயற்சிகள் மட்டும் தான் நாம் எடுப்போம். ஜலதோஷம் தான் அதிகம் இருக்கு. பாம்பு கடி தோஷம் எல்லாம் இருக்குற மாதிரி நாம் கேள்விபடலை என்றார்.

இதனை தொடர்ந்து பேசிய ஓ. பன்னீர்செல்வம், அமைச்சர் விரும்பினால் இந்த தோஷம் கழிப்பதற்கு உரியவர்களை அனுப்பி வைப்பேன் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன் என்றார். இதற்கு பதில் அளித்த அமைச்சர் அருண்ராஜ், தோஷத்தில் நம்பிக்கையும் இல்லை. விருப்பமும் இல்லை என்பதை தெரிவித்துக்கொள்கிறேன் என்றார்.

அமைச்சர் ஆதவ் அர்ஜுனா பேசுகையில், பெரியார் இயக்கம் பற்றி பேசிய திமுக இன்று, தோஷம் பற்றி பேசிக்கிட்டு இருக்காங்க. நாங்கள் பெரியார் வழியில் வந்தவர்கள். அறிவியல் பூர்வமாக இந்த பிரச்சனையை அணுக கூடியவர்கள் என்பதை இங்கே பதிவு செய்கிறேன் என்றார். இதனை தொடர்ந்து பேசிய எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின், எங்கள் சட்டமன்ற உறுப்பினர் கேட்டது உண்மையாகவே ஜலதோஷ த்தை பற்றி தான். எங்களுடைய துணை தலைவருக்கு உண்மையாகவே ஜலதோஷம். அவருக்கு 2 நாட்கள் உடல்நிலை சரியில்லை. அதற்கும் தீர்வு காணவேண்டும் என்றார்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

# புதன் க்ஷேத்திரம் என ஸ்ரீ மீனாட்சிசொக்கநாதர் கோவிலை அழைப்பதன் காரணம் என்ன?

**கற்பனை அல்ல...**
**பாண்டிய வரலாற்றுடன் தொடர்புடைய ஆழமான பின்னணி!**

மதுரையில் அமைந்துள்ள ஸ்ரீ மீனாட்சி சொக்கநாதர் திருக்கோவில், "புதன் க்ஷேத்திரம்" என்று அழைக்கப்படுவதற்குப் பின்னால் ஆன்மிகம் மட்டுமின்றி, பாண்டியர்களின் வரலாறு, கடல்வழி வாணிபம், கலை, கலாச்சாரம் ஆகியவற்றுடன் தொடர்பு டைய பல்வேறு காரணங்கள் இருப்பதாக ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

மீனாட்சியின் திருமேனி கருப்பு அல்லது கரும் பச்சை நிறம் கொண்டதாக ஆன்மிகப் பெரியோர்கள் கூறுகின்றனர். பச்சை நிற மேனி மரகதத்துடனும், புதன் கிரகத்துடனும் தொடர்புபடுத்தப்படு கிறது. அதேபோல், கலைகளைக் குறிக்கும் அடையாளமாக கிளி கருதப்படுகிறது. கிளி சுகபிரம்மத்தைக் குறிக்கும் என்றும் கூறப்படுகிறது. ,கிளி சுகப்ரம்ம ரிஷியையும் அவர் கலைகளில் சிறந்தவர். ஆதலால் கிளி கலைகளின் அம்சம். எல்லா கலைகளும் ஒருங்கே மீனாக்ஷி யின் கையில் அமர்ந்திருப்பதால் கலைகளின் அரசி.

அனைத்து கலைகளிலும் தேர்ச்சி பெற்றவளாகவும், கலைகளின் அதிபதியாகவும் மீனாட்சி போற்றப்படுகிறாள். சந்திரன் கலைகளுடனும், புதன் கணக்கு, வணிகம் போன்றவற்றுடனும் தொடர்புடையதாக ஜோதிடத்தில் கருதப்படுவதால், மதுரை மீனாட்சி கோவில் "புதன் க்ஷேத்திரம்" என்று அழைக்கப்படுவதற்கு இதுவே காரணமாக இருக்கலாம் என்று நீண்ட காலமாக கருதப்பட்டு வந்தது.

மேலும், பல கலைஞர்களுக்கும் ஆய்வாளர்க ளுக்கும் மீனாட்சியின் அருள் கிடைப்ப தாக நம்பப்படுவதும் இந்தப் பெயருக்கான காரணங்களில் ஒன்றாக இருக்கலாம். ஆனால், இதற்கு பின்னால் ஒரு பாண்டிய மன்னனின் வரலாற்றுத் தொடர்பும், அவரது மக்கள் மற்றும் நாட்டின் தனிச்சிறப்பும் மிக முக்கியமான காரணமாக இருக்கலாம் என்பதை வரலாற்றுத் தகவல்களின் மூலம் புரிந்துகொள்ள முடிகிறது.

**சின்னமனூர் செப்பேடு கூறும் தகவல்:**

சின்னமனூர் செப்பேட்டில் "வடிம்பலம்பாநின்ற பாண்டியன்" பற்றிய தகவல் இடம்பெற்றுள்ளது. ஒரு கல்பத்தின் முடிவில் கடலால் அழிவு ஏற்பட்ட பின்னரும், அடுத்த கல்பத்தில் பாண்டிய வம்சத்தின் ஆட்சி மீண்டும் தொடர்ந்ததாக அந்த வரலாற்றுக் குறிப்பு தெரிவிக்கிறது. சந்திரனின் மகன் புதனே பாண்டியனாக பிறந்தார் என்றும், கடலையே நுழைவாயிலாகக் கொண்டு ஆட்சி புரிந்தார் என்றும் கூறப்படுகிறது. ராமனுக்கு எப்படி சூர்ய வம்சமோ ( சூர்ய குல திலகம்) அதைப்போல பாண்டியனுக்கு (சந்திர குல திலகம்) சந்திர வம்சம் என்று கூறலாம்.



இங்கு சந்திரன் கடலையும் கலையையும், புதன் வாணிபத்தையும் குறிப்பதாக எடுத்துக்கொண்டால், கடல்வழி வாணிபத்தைச் சிறப்பாக மேற்கொண்ட பாண்டியர்களின் வரலாற்றுடன் "புதன் க்ஷேத்திரம்" என்ற பெயரைத் தொடர்புபடுத்திப் பார்க்க முடிகிறது.

இதுவரை "புதன் க்ஷேத்திரம்" என்ற பெயருக்கான காரணத்திற்கு எந்தப் புராணத்திலும் தெளிவான விடை இல்லாதது ஆச்சரியமாக இருந்தது. ஆனால், மேற்கண்ட வரலாற்றுத் தகவல்களின் அடிப்படையில் இந்தப் பெயரை இவ்வாறு விளக்கிப் புரிந்து கொள்ளும்போது, பொருள் கொண்ட ஒரு வரலாற்றுச் சார்ந்த பதில் கிடைக்கிறது என்ற மனநிறைவு ஏற்படுகிறது.

**கடல்வழி வாணிபத்தில் பாண்டியர்களின் சிறப்பு**

சோழ மன்னர்கள் கடல்வழிப் பயணம், கடற்படை மற்றும் கடல் சார்ந்த நுண்ணறிவில் சிறந்து விளங்கியவர்கள் என்று வரலாற்றில் படித்திருக்கிறோம். அதேவேளையில், பாண்டிய மன்னர்களும் கடல்வழிப் பயணம், கடற்படை மற்றும் கடல்வழி வாணிபத்தில் சிறந்து விளங்கியவர்கள் என்பதை பல்வேறு வரலாற்றுச் செய்திகள் வெளிப்படுத்துகின்றன.

பாண்டியர்கள் கிரேக்கர்கள், ரோமானியர்கள், பாரசீகர்கள், சீனர்கள், அரேபியர்கள் உள்ளிட்ட பல்வேறு நாடுகளுடன் வாணிபத் தொடர்புகளை யும், கலாச்சார நல்லுறவையும் கொண்டிருந்தனர் என்பதும் அவர்களின் சிறப்பான அறிவாற்றலையும் உலகளாவிய தொடர்புகளையும் எடுத்துக்காட்டுகிறது.

**கபாடபுரம் கடலோடு இணைந்த பாண்டிய வரலாறு:**

மத்திய அல்லது இடைச் சங்க காலத்தில் கபாடபுரம் எனும் கடற்கரையோரப் பகுதியில் இருந்த பாண்டிய நகரம் கடலால் அழிவுற்றதாக சிலப்பதிகாரம் மற்றும் கலித்தொகை ஆகிய இலக்கியங்களில் செய்திகள் இடம்பெற்றுள்ளன.

மேலும், ராமாயணத்திலும் அர்த்தசாஸ்திரத்திலும் "பாண்டிய கவாடம்" என்ற பெயர் குறிப்பிடப்படுவது, பாண்டியர்களுக்கும் கடல் சார்ந்த பகுதிகளுக்கும் இருந்த தொடர்பை நினைவுபடுத்துகிறது.

**மீனாட்சி கோவில் காலந்தோறும் ஏற்பட்ட மாற்றங்கள்:**

பாண்டியர்களின் காலத்தில் பல்வேறு கட்டுமானப் பணிகள் நடைபெற்றுள்ளன. முதலாம் ஜடாவர்ம குலசேகரன்காலத்தில் அவரின் கீழ் பணியாற்றிய நரசிங்கன் என்ற அதிகாரி, கி.பி. 1190–ஆம் ஆண்டில் திருப்பரங்குன்றத்தில் ஒரு மண்டபம் கட்டியதாகக் குறிப்பு உள்ளது. அதேபோல், முதலாம் மாறவர்ம குலசேகரன் காலத்தில், கி.பி. 1309–ஆம் ஆண்டில் "திருக்காமக் கோட்டத்து ஆளுடைய நாச்சியார்" எனக் குறிப்பிடப்படும் மீனா ட்சிக்கு ஒரு கருவறை கட்ட ப்பட்டதாக திருப்பரங்குன்றம் கோவிலில் உள்ள குறிப்பை செண்டப் பிள்ளை என்பவர் சுட்டிக்காட்டியுள்ளதாக கூறப்படுகிறது.

ஏற்கனவே மீனாட்சிக்கு கருவறைச் சன்னதி இருந்திருக்கலாம் என்றும், பின்னாளில் இயற்கைச் சீற்றங்களாலும் படையெடுப்புகளாலும் அது அழிந்திருக்கலாம் என்றும் கருதப்படுகிறது. பின்னர் அது புதுப்பிக்கப்பட்டிருக்கலாம் அல்லது புதிய கருவறை கட்டப்பட்டிருக்கலாம் என்றும் ஆய்வுக் கருத்துகள் தெரிவிக்கின்றன.

**பல ஆட்சிகளைக் கடந்து வந்த ஆலய வரலாறு:**

மீனாட்சி அம்மன் கோவில் ஒரே காலகட்டத்தில் உருவான அமைப்பு அல்ல. பல்வேறு காலகட்டங்களில் கட்டடக்கலை, பிரகாரங்கள், கோபுரங்கள், கட்டுமானப் பணிகள், பூஜை முறைகள், அரசருக்குக் கட்டு ப்பட்ட ஆலய நிர்வாகம், நிர்வாகிகள், திருவிழாக்கள் உள்ளிட்ட பல அம்சங்களில் மாற்றங்களைச் சந்தித்துள்ளது.

இந்த மாற்றங்கள் முற்பாண்டியர்கள், களப்பிரர்கள், கர்நாடக அரசர்கள், முகமதிய படையெடுப்புகள், சோழர்கள், பிற்காலப் பாண்டியர்கள், மதுரை சுல்தான்கள், பிரிட்டிஷ் ஆட்சி, சுதந்திரத்திற்கு முன்பிருந்த ஆலயத் தனியார் நிர்வாகிகள், நிர்வாகக் குழுக்கள், சுதந்திர இந்தியாவின் பல்வேறு ஆட்சிகள் எனத் தொடர்ந்து, இன்று இந்து சமய அறநிலையத் துறை நிர்வாகம் வரை வந்துள்ளன.

எனவே, "புதன் க்ஷேத்திரம்" என்ற பெயர் வெறும் ஆன்மிக அடையாளமா? அல்லது பாண்டியர்களின் கடல், வாணிபம், கலை மற்றும் வரலாற்றுச் சிறப்புகளுடன் இணைந்த பெயரா? என்ற கேள்விக்கு, கிடைக்கின்ற வரலாற்றுத் தகவல்களை இணைத்துப் பார்க்கும்போது, இந்தப் பெயருக்குப் பின்னால் பல அடுக்குகளைக் கொண்ட சுவாரஸ்யமான வரலாற்றுப் பின்னணி இருப்பதை உணர முடிகிறது.

இப்படிக்கு,
**ஆதி சைவன்**
**எஸ். சங்கரன்,**
வழக்கறிஞர், மதுரை.

# தி.மு.க. முப்பெரும் விழாவில் விருது பெறுவோர் பட்டியல்: கட்சி தலைமை அறிவிப்பு..!



சென்னை, செப். 02–

தி.மு.க. முப்பெரும் விழாவில் விருது பெறுவோர் பட்டியலை கட்சித் தலைமை அறிவித்துள்ளது.

தி.மு.க. சார்பில் ஆண்டுதோறும் பெரியார் பிறந்த நாள், அண்ணா பிறந்த நாள், கட்சி தொடங்கப்பட்ட நாள் ஆகிய 3 முக்கிய நிகழ்வுகளையும் இணைத்து தி.மு.க. முப்பெரும் விழாவாக கொண்டாடப்பட்டு வருகிறது. அந்த வகையில், இந்த ஆண்டு (2026) தி.மு.க. முப்பெரும் விழா வரும் 15–ந் தேதி சென்னை அண்ணா அறிவாலயத்தில் உள்ள கலைஞர் அரங்கத்தில் நடைபெற இருக்கிறது. இந்நிலையில் இந்த விழாவில் விருது பெறுவோர் பட்டியலை தி.மு.க. தலைமை வெளியிட்டுள்ளது.

அதன்படி, பெரியார் விருது தி.மு.க. விவசாய அணி துணை செயலாளர் கு.செல்லப்பாவுக்கும், அண்ணா விருது சேலம் மத்திய மாவட்ட அவைத் தலைவர் ஜி.கே.சுபாஷூக்கும், கலைஞர் விருது கட்சியின் துணைப் பொதுச் செயலாளர் திருச்சி சிவா எம்.பி.க்கும், பாவேந்தர் விருது கட்சியின் மருத்துவ அணித் தலைவர் கனிமொழி என்.வி.என். சோமுவுக்கும், பேராசிரியர் விருது தலைமை செயற்குழு உறுப்பினர் மிசா எஸ்.அகமது தம்பிக்கும், மு.க.ஸ்டாலின் விருது இளைஞர் அணி துணைச் செயலாளர் நா. இளையராஜாவுக்கும் வழங்கப்பட இருக்கிறது.

# தீபாவளிக்கு ஊருக்குப் போறீங்களா? ரயில் டிக்கெட் முன்பதிவு எப்போது?



சென்னை, செப். 02–

இந்த 2026ஆம் ஆண்டு நவம்பர் 8ஆம் தேதி ஞாயிற்றுக்கி ழமை தீபாவளி பண்டிகைக் கொண்டாடப்ப டவிருப்பதால், சொந்த ஊர்களுக்குச் செல்வோர் ரயில் டிக்கெட் முன்பதிவு செய்யும் தேதிகள் வெளியாகியிருக்கின்றன.

பொதுவாக வார நாள்களில் தீபாவளி பண்டிகை வரும்போது, தீபாவளி பண்டிகைக்கு முன்பு அல்லது அதனைத் தொடர்ந்து ஒரு சில நாள்கள் விடுமுறை எடுத்து வார இறுதி வரை அதனை நீட்டித்துக் கொண்டு ரயில் டிக்கெட் முன்பதிவு செய்து கொள்ளலாம். ஆனால், இந்த ஆண்டு ஞாயிற்றுக்கிழமை வந்திருப்பதால், வசதிக்கேற்ப தீபாவளிக்கு முன்பு இரண்டு மூன்று அல்லது ஐந்து நாள்கள் கூட விடுமுறை எடுத்துக் கொள்ளலாம். இல்லையேல், தீபாவளிக்கு முன்பு ஒரு நாள் தொடங்கி அடுத்த வாரத்தில் விடுமுறைகளை எடுத்துக் கொள்ளலாம். இதனால், ஒரே நேரத்தில் ஒரே எண்ணிக்கையிலான மக்கள் ரயில் டிக்கெட் முன்பதிவு செய்வது குறையும். ஊர்களுக்குச் செல்லவும் திரும்பவும் வசதியான நாள்கள் இருப்பதால் முன்பதிவுக்கு செய்யும்போது பெரிய அளவில் ரயில் டிக்கெட் கிடைப்பதில் சவாலாக இருக்காது என்றே கருதப்படுகிறது. தீபாவளி நவம்பர் 8ஆம் தேதி.

எனவே, நவம்பர் 5ஆம் தேதி வியாழக்கிழமை ஊருக்குச் செல்ல விரும்புவோர் செப். 6ஆம் தேதி ரயில் டிக்கெட் முன்பதிவு செய்ய வேண்டும். வெள்ளிக்கிழமை ஊருக்குச் செல்வதாக இருந்தால் செப்.7ஆம் தேதி டிக்கெட் முன்பதிவு செய்ய வேண்டும்.

அதுபோல, ஊருக்குத் திரும்ப திங்கள்கிழமை திரும்புவதாக இருந்தால் செப்.10ஆம் தேதியும், செவ்வாய்க்கி ழமை ரயிலுக்கு செப்.11ஆம் தேதியும் முன்பதிவு செய்ய வேண்டும். ரயில் டிக்கெட் முன்பதிவுகள் காலை 8 மணிக்குத் தொடங்குகின்றன. எனவே, கவனமாக அனைத்து விவரங்களையும் தயாராக வைத்துக் கொண்டு காலை 8 மணிக்கு ரயில் டிக்கெட்டை முன்பதிவு செய்து கொள்ளலாம்.



பழனி முருகன் மலைக்கோவிலில் காங்கிரஸ் கட்சி சார்பில் காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி, மாநிலத் தலைவர் மாணிக் தாகூர் எம்பி, மாநில ஓபிசி அணி தலைவர் நவீன் ஆகியோரின் பிறந்தநாளை முன்னிட்டு தங்கரதம் எடுக்கப்பட்டது.

# மது பாட்டிலுக்கு கூடுதல் பணம் வசூலா..? இந்த எண்ணில் புகார் தரலாம்!





சென்னை, செப். 02–

மது கடைகள் தொடர்பாக பொதுமக்கள் மற்றும் மது பிரியர்கள் தங்களின் புகார்களை தெரிவிக்க வாடி க்கையாளர் சேவை மையம் தொடங்கப்பட்டுள்ளதாக மதுவிலக்கு, ஆயத் தீர்வை அமைச்சர் விக்னேஷ் தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக அவர் தனது எக்ஸ் வலைதளத்தில் கூறியிருப்பதாவது:–

டாஸ்மாக் சில்லறை விற்பனை நிலையங்கள் மற்றும் சேவைகள் தொடர்பாக நுகர்வோர், பொதுமக்கள் தங்களது புகார்கள், குறைகள் மற்றும் இதர பிரச்சினைகளை தெரிவிக்கும் வகையில், டாஸ்மாக் கட்டணமில்லா வாடிக்கையாளர் சேவை மையம் ஆக.31–ம் தேதி முதல் செயல்பாட்டுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.


அதன்படி, கட்டணமில்லா தொலைபேசி எண் 1800–889–2015 மற்றும் அதிகாரப்பூர்வ வாட்ஸ்அப் எண் 73977 20230 ஆகியவற்றைத் தொடர்புகொண்டு 24 மணி நேரமும் தெரிவிக்கலாம். மேலும், டாஸ்மாக் நிறுவனத்தின் அதிகாரப்பூர்வ சமூக ஊடக கணக்குகள் மூலமும் புகார் தெரிவிக்கலாம். புகார்கள் மீதான நடவடிக்கை தொடர்ந்து கண்காணிக்கப்படும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தொடர் சரிவில் தங்கம் விலை!



சென்னை, செப். 02–

சென்னையில் 22 கேரட் ஆபரணத் தங்கத்தின் விலை இன்று சவரனுக்கு ரூ.1,800 குறைந்து, ஒரு சவரன் ரூ.1,11,600–க்கு விற்பனை செய்யப்படுகிறது. கிராமுக்கு ரூ.225 குறைந்து, ஒரு கிராம் ரூ.13,950–க்கு விற்பனை செய்யப்படுகிறது. வெள்ளி விலையில் இன்று மாற்றமில்லை. அதன்படி வெள்ளி ஒரு கிராம் ரூ.250–க்கும், ஒரு கிலோ ரூ.2 லட்சத்து 50 ஆயிரத்துக்கும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.



## சினிமா துளிகள்..!

## மருத்துவமனையில் நடிகை மமிதா பைஜு!"



இளம் நடிகை மமிதா பைஜூ உடல்நலக்குறைவு காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சூர்யாவுடன் நடித்த 'விஸ்வநாத் அண்ட் சன்ஸ்', நிவின் பாலியுடன் நடித்த 'பெத்லகேம் குடும்ப யூனிட்' ஆகிய படங்கள் சமீபத்தில் வெளியாகி நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளன. இரு படங்களும் ரூ.200 கோடிக்கு மேல் வசூலித்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கு முன்பு விஜய்யுடன் நடித்த 'ஜனநாயகன்' படமும் ரூ.200 கோடியை கடந்ததாக கூறப்படுகிறது.

ஓணம் பண்டிகையை முன்னிட்டு ஆஸ்திரேலியாவில் நடைபெறவிருந்த நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக பங்கேற்க இருந்த மமிதா, உடல்நிலை காரணமாக அதில் கலந்துகொள்ள முடியவில்லை. வீடியோ மூலம் தகவல் தெரிவித்த அவர், "நான் தற்போது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளேன். மருத்து வர்கள் முழுமையான ஓய்வு தேவை என அறிவுறுத்தியுள்ளனர்" என்று தெரிவித்துள்ளார்.

## ரஜினியுடன் கயாடு... தர்மனில் டபுள் ட்ரீட்!"



இயக்குநர் அஷ்வத் மாரிமுத்து இயக்கத்தில் ரஜினிகாந்த் நடிக்கும் 'தர்மன்' படத்தில் நடிகை கயாடு லோஹர், ரஜினியுடன் இணைந்து சிறப்பு நடனமாட உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. 'தர்மன்' படத்தில் ரஜினி மருத்துவராக நடிக்கிறார். 'படையப்பா' + 'வேட்டையாடு விளையாடு' கலந்த ஆக்ஷன் கதையாக இப்படம் உருவாகி வருவதாக இயக்குநர் தெரிவித்துள்ளார்.


தற்போது படத்தின் இரண்டாம் கட்ட படப்பிடிப்பு விறுவிறுப்பாக நடைபெறுகிறது.

பிரபல தெலுங்கு நடிகர் ராம் பொதினேனி, ரஜினிக்கு வில்லனாக நடிக்க உள்ளதாக தகவல்.

நடிகை ஷ்ரேயா சரண் படப்பிடிப்பு புகைப்படத்தை வெளியிட்டிருந்த நிலையில், அது சிறப்பு நடனத்திற்கானது என தகவல் பரவியது. தற்போது கயாடு லோஹரும் ரஜினியுடன் இணைய உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

சில நாள்களுக்கு முன்பு விமானத்தில் ரஜினிக்கு அருகில் பயணித்த கயாடு, "விரைவில் ரஜினி சாருடன் இணைந்து நடிப்பேன்" என தெரிவித்திருந்தார்.

## திருமண பந்தத்தில் இணைந்த சின்ன திரை பிரபலம்!



ரஞ்சனி தொடர் பிரபலம் கிரிஷ் மற்றும் சஜிதாவிற்கு (ஆக. 31) திருமணம் நடைபெற்றது. ஆண் – பெண் நட்பை மையப்படுத்தியும் இளம் ரசிகர்களைக் கவரும் வகையிலும் எடுக்கப்பட்டு வந்த தொடர் ரஞ்சனி. இந்தத் தொடரில்முக்கிய பாத்திரத்தில் நடித்து ரசிகர்கள் மத்தியில் பிரபலமானவர் நடிகர் கிரிஷ்.

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020